“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

ஜப்பசி – கார்த்திகை – மார்கழி – 2023



நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே!

- கவிமணி -

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- **Accounting & Business Services**
- **Tax Consultancy**
- **Tax Investigation**
- **Locums & Umbrella Payroll**
- **Property Consultancy**
- **Mortgages**
- **Pension & Investment**
- **Insurance**
- **Will & Probate Services**

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 31

# கலசம்
KALASAM

ஒலி 108

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# கொஞ்சம் நிறுத்துங்கள்

இன்று தொழில்நுட்பம் நன்றாக வளர்ந்துவிட்டது. தொலைத் தொடர்பு, ஒளிப்பதிவு, ஒளி/ஒலிபரப்பு என்பவை மிக இலகுவாகிவிட்டன. இதனால் பல நாடுகளில் வாழ்பவர்களும் விரைவாக, இலகுவாக எல்லாவற்றையும் அறிய, பார்க்க இயலுகிறது. திருமணங்கள், புனித நீராட்டு விழாக்கள், ஏன், மரணச்சடங்குகள்கூட ஒரு நாட்டில் நடப்பதை இன்னொரு நாட்டிலிருந்து பார்க்கும் வசதி வந்துவிட்டது. இந்த வரிசையில் இப்போது கோயில் திரு விழாக்களும் சேர்ந்துவிட்டன. இலண்டனில் இருந்துகொண்டே நல்லூர் முருகனையும் செந்தூர் முருகனையும் பக்தர்கள் தரிசிக்கத் தொடங்கிவிட்டார்கள். “கோவிட்” என்ற பெருந்தொற்று வந்தமை இதற்கு மேலும் வழிகோலிவிட்டது.

இப்படி விழாக்களை ஒளிப்பதிவு செய்வோர் சமூக வலைத்தளங்களில் இவற்றைப் பதிவிடுகிறார்கள். விழாச்செய்யும் முறைகளையும் அவர்களே உத்தரவிடுகிறார்கள். பார்ப்போரின் எண்ணிக்கையைப் பொறுத்துப் பதிவிடுவோரின் வருவாய் அதிகரிக்கும். ஆக, இது ஒரு பொருளீட்டும் தொழிலாகவும் ஆகிவிட்டது. அதனால், நன்றாக எடுக்கவேண்டும் என்ற முனைப்பு ஒளிப் பதிவாளர்களின் மனதில் எழுகிறது. அதை முன்நிறுத்தி, கோயிலில் நேரே வழிபட வந்தவர்கள் முன்னால் நின்று படம் பிடிப்போர் பலர். பின்னால் நின்று வழிபடுவோர்பற்றி இவர்களுக்கு எள்ளளவும் அக்கறை இல்லை. வீட்டில் இருந்தபடியே பார்க்க உதவுவதால், இப்படிப் பதிவிடுவோர், சேவை செய்வோரின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

சாதாரண விழாக்களை எங்கிருந்து எப்படிப் பார்த்தாலும் பரவாயில்லை, ஆனால், புனிதமான கோயில் நிகழ்வுகளை வீட்டில் இருந்து பார்க்கும்போது அதே மனநிறைவு ஏற்படுமா என்பது கேள்விக்குறி. கருவறையில் நடப்பவைகூட வெளிச்சமிட்டுக் காட்டப்படுகின்றன. கோயிலில் உள்ள சக்தி, மன அமைதி என்பவை வீட்டில் வருமா என்று தெரியவில்லை. ஆகம விதிகளும் புறந்தள்ளப்படுகின்றன. திருமணம் ஒன்றிலே மணப்பெண்ணின் கழுத்திலே மணமகன் மாங்கல்யம் அணியத் தொடங்க, ஒரு படப்பிடிப்பாளர் “கொஞ்சம் பொறுங்கோ” என்று தடுத்துத் தனது கருவியைச் சரிசெய்த பின்னரே தாலி கட்டுவதற்கு அநுமதித்தார். இன்னொரு சடங்கில், மண மகளின் நெற்றியில் குங்குமம் சிறிது விலகிவிட்து என்று, “குங்குமத்தை கொஞ்சம் அழியுங்கோ” என்றார் இன்னொருவர்.

அதேபோலக் கோயில்களிலும் அர்ச்சகர்களை, ஓதுவார்களை, “கொஞ்சம் நிறுத்துங்கோ” என்று சொல்லும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அப்படி நடக்காது என்று எதிர்பார்ப்போம்.

**க ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்


சாரங்கி 03

இலங்கை வடபுலத்தில் நாச்சியார் வழிபாடு 06

கர்மவீரர்கள் - கந்தபுராணச் சிந்தனைகள் 09

இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் 10

பழனி - பயணக் கட்டுரை 14

திருமுறையும் சிவயோகமும் 18

கடவுள் நம்பிக்கையும் சோதிடமும் 20

Holistic Approach to heal the Mental & Physical ailments 27

பிழைப்பதற்காக மேடை ஏறாதீர் 30

திருக்குறள் கதைகள் 31

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் 33

இராசன் வாத்தியார் 38

சிவாலய தரிசனம் 43


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# சாரங்கி

## மீ ப சோமு
(நன்றி: நமது செல்வம் கட்டுரைத் தொகுப்பு)



சிறு பையனாக இருந்தபோது என் நெருங்கிய உறவினரான தேவார இசைமணி சுந்தர ஓதுவாமூர்த்திகளின் வீட்டில், தைப் பொங்கலுக்கு வெள்ளை அடிப்பதற்காகப் பொருள்களை ஒதுங்க வைத்துக்கொண் டிருந்தார்கள். அதற்கு முன்பு நான் பார்த்திராத ஓர் இசைக்கருவி இறப்பிலே செருகி வைத்திருந்ததை அப்போது பார்த்தேன். அது வயலினுமில்லை; வீணையுமில்லை.

நெல்லை சுந்தர ஓதுவாமூர்த்திகள், "இதுதான் சாரங்கி வாத்தியம். நம் முன்னோர் களாகிய கோயில் ஸ்தானிகர்கள் பூசை வேளையில் சுவாமி சந்நிதியில் வாசித்துவந்த வாத்தியம் இது. இப்பொது நம் தமிழ்நாட்டில் யாரும் சாரங்கியைத் தொடுவதில்லை." இவ்வாறு எனக்குச் சொன்னார்.

"நானே ஆரம்பத்தில் சாரங்கிதான் பயின்றேன். பிறகு, மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயரும் நானும் ஒரே இடத்தில் குருகுலவாசம் செய்து வயலின் பயின்றோம். பிறகு, பாட்டே எனக்குப் பிரபலமானதும் வாத்தியத்தை விட்டுவிட்டேன்" என்று மேலும் சொன்னார் சுந்தர ஓதுவாமூர்த்தி.

இது நடந்து ஐம்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்றைய நிலைமை என்ன? சாரங்கி இன்றும் வடநாட்டு இசைக்கச்சேரிகளில் முக்கியமான பக்கவாத்தியமாகப் பயின்று வருகிறது. ஆனால் நமது தமிழகத்திலோ சாரங்கி வாசிக்கிற கலைஞர்களே அபூர்வம். நமது கச்சேரிகளில் சாரங்கிக்கு இடமேயில்லை. ஆனால் ஒரு காலத்தில் நமது தமிழகத்தில் இந்த அருமையான சாரங்கி வாத்தியம் மிகமிக முக்கியமான இடத்தை வகித்து வந்திருக்கிறது. தேவார இசைவாணர் தண்டபாணிதேசிகர் அவர்களின் தாய்வழிப் பாட்டனார் ஒரு புகழ்பெற்ற சாரங்கிக் கலைஞர். சுந்தர ஓதுவாமூர்த்திகளின் முன்னோர்களில் ஒரு வரான சாலிவாடீசுவர ஓதுவார் சாரங்கியில் அபாரமான சாதனைகள் புரிந்தவர் என்பது வரலாறு.

நமது தமிழ்நாட்டுக் கோயில்களில், சில ஊர் களில், சாரங்கிக் கட்டளை என்றே சில நிவந்தங்கள், மானியங்கள் விடப்பட்டுச் சென்ற நூற்றாண்டு வரை இந்தக் கட்டளை செவ்வனே நடந்து வந்திருக்கிறது.

தருமபுரம் ஆதீனத்துச் சரித்திரத்தை ஒரு சமயம் நான் பார்த்தபோது அதில் சாரங்கியைப்பற்றிச் சில சுவையான செய்திகளைக் கண்டேன். பல ஆண்டகளுக்கு முன்பு, இந்த மடாலயத்தில் சாரங்கித் தம்பிரான் என்றே ஒரு துறவி இருந்திருக்கிறார். **பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் இந்த அரிய இசைக்கருவியிலே மேகராகக் குறிஞ்சி என்ற அற்புதமான பண்ணை வாசித்து மழை பெய்வித்தார் என்று ஒரு வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது.** இந்தத் துறவியின் வாத்திய வாசிப்பு திருவனந்தபுரம் மன்னரை

மிகமிகக் கவர்ந்தது என்றும், அந்த மன்னர் இந்தத் துறவியின் சாரங்கி வாசிப்புக்காகவே பல சிறப்புக்கள் செய்தார் என்றும் சில ரசமான செய்திகள் அந்த வரலாற்றுக் குறிப்பில் உள்ளன.

பழங்காலத்தில் நம் தமிழகத்தில் சாரங்கி என்ற இந்த வாத்தியத்தை "வில் யாழ்" என்று அழைத்திருக்கிறார்கள். சாரங்கம் என்ற ஸம்ஸ்கிருதச் சொல்லுக்கு வில் என்று பொருள். மற்ற வீணைகள் நரம்புகளைச் சுண்டி வாசிக்கிற இசைக்கருவிகள். ஆனால் இந்த வாத்தியம் அவ்வாறில்லாமல் வில்லை வைத்து வாசிக்கக்கூடிய கருவியாக இருப்பதால் இதை வில் யாழ் என்றும், சாரங்க வீணை அல்லது சாரங்கி என்றும் அழைத்திருக்கிறார்கள்.

1957ஆம் ஆண்டில் சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கூட்டத்தில், தென்காசி ஆறுமுக ஓதுவார் என்ற இசைவாணர் நமது பழந்தமிழ் முறைப்படி சாரங்கி வாத்தியத்தை வாசித்துக் காட்டி, அங்கே கூடியிருந்த சபையோரை மெய்சிலிர்க்கச் செய்தார்.

இறைவனை வழிபடுகிற ஸம்ஸ்கிருத வேதம் பல ஒலிச்சட்டங்களுக்கு உட்பட்டது. அது போலவே தமிழ் வேதங்களாகிய திரு முறைகளும் கட்டளை என்று அழைக்கப் பெறுகிற சிக்ஷா முறைகளைத் தம்முள் அடக்கியவை. இந்த முறையிலே பாடும்போது பக்கவாத்தியமும் ஊமை வாத்தியமாக இராமல், சொற்களின் திரள் ஒலியே அதில் கேட்கும்படியாக வாசிப்புச் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்துக்கு மிகவும் இயைபோடு கூடிய ஒரு வாத்தியம் வில்யாழ் என்கின்ற சாரங்கியாகும்.

மனித சாரீரம் போன்று இசைக்கிற ஒரு பெரிய ஒலிச்செறிவு இந்த வாத்தியத்துக்கு உண்டு. மனிதக் குரல் ஒலிப்பதுபோலவே மொழி களையும் இசை வடிவத்தையும் சேர்த்து இயக்குகிற ஆற்றல் இந்த இசைக்கருவிக்கு இயல்பாகவே ஒலிக்கும் வண்ணம், இதன் நாயக நரம்புகளும் துணை நரம்புகளும் இணைந்து அமைந்திருக்கின்றன. இந்த வாத்தியத்தைச் சுருதி சேர்ப்பதும், இணை நரம்புகள் தளராதபடி பார்த்துக்கொள்வதும் பெரிய பயிற்சியாகும்.

வாரம் என்றால் கூட்டிசை வழிபாடு, தேவாரம் -தெய்வ வழிபாடு. தேவாரம் எனப்படும் தெய்வ வழிபாட்டுப் பாடல்களுக்கு ஏற்ற முறையில் குரல்களின் இணைப்புக்கு ஒரு வண்ணத்தையும் மெருகையும் அழுத்திக் காட்டுகிற பண்பு சாரங்கிக்கு இருக்கிறது என்ற நுட்பத்தை நன்கு உணர்ந்த நம் முன்னோர் களாகிய இசைஞான பண்டிதர்கள், இந்த வாத்தியத்தைக் கோயில் வழிபாட்டில் ஓர் அங்கமாகவே வைத்திருக்கிறார்கள். நமது தமிழ் மன்னர்களும் இதற்கென்று பெரிய மானியங்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கும் நெல்லை மாவட்டத்தில் கோயில் ஸ்தானிகர்கள் என்று அழைக்கப்பெறும் சில ஓதுவார்கள் வீட்டில் சாரங்கி இருக்கிறது. ஆனால் அதில் விளையாடிய விரல்கள் மறைந்துவிட்டன.! எனவே வாத்தியத்தை எடுத்து இறப்பிலே செருகிவிட்டார்கள்!

1860ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் இதுபற்றி ஒரு குறிப்பு எழுதி வெளியிட்டிருக்கிறார். அவர் சிதம்பரத்தில் தமது பாடசாலையை நிறுவும்போது, அதன் இலட்சியங்களிலே ஒன்றாக, சாரங்கி வாத்தியத்துக்கு மறுமலர்ச்சி கொண்டுவரவேண்டும் என்று ஆசைப்பட்டார். தமிழ் நாட்டுக்கே உரிய இந்த அருமையான வாத்தியம் நமது பழக்கத்திலிருந்து மறைவதும், வட நாட்டுக் கச்சேரிகளில் மட்டுமே முக்கிய ஸ்தானத்தைத் தொடர்ந்து வகித்து வருவதும், ஆறுமுகநாவலரின் உள்ளத்தை வேதனைப் படுத்தின. அவருக்கு ஏற்பட்ட இந்த வருத்தத்தில் 1860இல் தமிழ் மக்களுக்கு ஒரு விண்ணப்பம் அச்சிட்டு வெளியிட்டார். அந்த அச்சிட்ட விண்ணப்பத்தில் ஒரு வாக்கியம், "சாயங்காலத்திலே சிவதரிசனம் பண்ணு கிறவர்களுக்குச் சிவபக்தி விளையும் வண்ணம்

ஓதுவார்களைக் கொண்டு சிவ சந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும் (நமது பழைய மரபுப்படி) சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்!”

தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் அளப்பரிய தொண்டு செய்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பெருமானின் ஆசை இது. ஆனால் இந்த ஆசையும் அவரது முயற்சிகளும் பலன்தராது போய்விட்டன. சாரங்கிக்குத் தமிழகத்தில் இன்னும் மறுவாழ்வு ஏற்படவில்லை.

நீண்ட நாள்களாக நமது கோயில்களில் பயிலப்பட்டு வந்த ஒரு வாத்தியம், நமது பூசை முறையில் முக்கியமான உறுப்பாகத் திகழ்ந்த ஓர் இசைக்கருவி, நமது வரலாற்றில் இரண்டறக் கலந்துள்ள வில் யாழ் - அது நமது பயிற்சியிலிருந்து மறையும்படி விடுவது, ஒரு பெரிய செல்வத்தை நாம் இழப்பதற்கு ஒப்பாகும். நமது தென்னகத்துக்கே உரிய சாரங்கி வாத்தியத்தை அது வகித்துவந்த பழைய இடத்துக்கு மீண்டும் கொண்டுவருவது நமது செல்வத்தை நாம் மீட்டுக்கொள்கிற முயற்சியேயாகும். அந்த முயற்சியை எதிர்பார்க்கிறது நமது இசைச் செல்வம்.

தகவல்: விமால்

# இருதலைக் கொள்ளி எறும்பு

“கொள்ளித் தலையின் எறும்பது போலக் குலையும் என்றன்
உள்ளத் துயரை ஒழித்தருளாய்” - கந்தரலங்காரம்

“கொள்ளித் தலையின் எறும்பு” என்று மட்டுமே அருணகிரிநாதர் கூறினார். கொள்ளிக் கொம்பில் அகப்பட்டுக்கொண்ட எறும்பு கீழே குதித்து உய்வுபெறலாம்.

ஒரு மூங்கிற் குழாய், அதில் இருபுறங்களிலும் தீப்பிடித்து எரியத்தொடங்கியது. அந்த மூங்கிற் குழாய்க்குள் ஒரு எறும்பு இருந்தது. அது என்ன செய்யும்? குழாய்க்குள்ளே இருப்பதனால் குதிக்கவும் முடியாது. இருபுறங்களிலும் நெருப்பு. அது உள்ளே கிடந்து என்ன வேதனை அடையும்! அதனை உன்னிப் பாருங்கள். இதனை மாணிக்கவாசகர் கூறுகிறார்:

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டாய் வியன்மூ வுலகுக்கு
ஒருதலைவா மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே

- நீத்தல்விண்ணப்பம்

“வியக்கத் தக்க மூன்று உலகங்களுக்கு ஒப்பற்ற தலைவனே! நிலைபெற்ற உத்தரகோசமங்கை என்ற திருத்தலத்துக்கு அரசே! போர் புரிகின்ற மூன்று இலை வடிவாக உள்ள சூலத்தை வலத்தில் ஏந்திக்கொண்டு விளங்குபவரே! தேவரீரைப் பிரிந்து விரிந்த தலையை உடையவனாகி, இருபக்கமும் எரிகின்ற மூங்கிற் குழாய்க்குள் அகப்பட்ட எறும்பைப்போல் தவிக்கும் அடியேனை இத் தொல்லையிலிருந்து விடுவித்து ஆண்டருள்வாய்!”

- நன்றி: “திருவாசகத் தேன்” , திருமுருக கிருபாநந்த வாரியார்

# இலங்கை வடபுலத்தில் நாச்சிமார் வழிபாடு

செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்
முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



இலங்கையில் வாழும் சைவ மக்களிடையே நிலவுகின்ற வழிபாட்டு மரபுகளை ஆகமம் சார்ந்த வழிபாடு - ஆகமம் சாராத வழிபாடு எனப் பிரதானமாக இரண்டு வகைப்படுத்தி நோக்க முடியும். ஆகமம் சார்ந்த வழிபாடு பெருந்தெய்வங்களுக்காக ஆற்றப்படுவதாகவும் ஆகமம் சாராத வழிபாடு சிறுதெய்வங்களுக்காக அல்லது கிராமியத் தெய்வங்களுக்காக ஆற்றப்படுவதாகவும் கொள்ளப்படுவதுண்டு. நாகரிக வளர்ச்சி, வசதிகளின் பெருக்கம் என்பவை சிறுதெய்வ வழிபாட்டைப் பெருந்தெய்வ வழிபாட்டிற்குரிய மரபுகளுடன் கலந்து விடுகின்ற நிலைமைகளுக்கு இட்டுச்செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஆகம முறை வழிபாட்டிற்கெனக் குருமாராக அந்தணர்களோ சைவக்குருமார்களோ அமைந்திருப்பர். கிராமிய வழிபாட்டு முறையில் பூசை நியமங்கள் குறித்த இறுக்கங்கள் பேணப்படுவதில்லை. குடும்பம் சார்ந்த பிரதிநிதி ஒருவரே விளக்கு வைப்பவராக அல்லது பூசகராகச் செயற்படுவார். இங்கு பக்தியே முதன்மை பெற்று விளங்கும். ஆகம வழிபாட்டு முறையில் ஓரளவு ஒருமைத்தன்மையைத் தரிசிக்க முடியுமாயினும் கிராமிய வழிபாட்டு முறையில் இடம், காலம் என்பவற்றிற்கேற்றாற் போல வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையின் வழிபாட்டு மரபில் சிவன், விஷ்ணு, அம்பாள், பிள்ளையார், முருகன் ஆகிய தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகவும் கண்ணகி, நாச்சிமார், ஐயனார், நாகதம்பிரான், வைரவர், முனியப்பர், நரசிங்கர், பூதவராயர் முதலிய தெய்வங்கள் கிராமியத் தெய்வங்களாக அல்லது சிறு தெய்வங்களாகவும் கொள்ளப்படுகின்றன.

வீட்டு வழிபாட்டிற்குரிய கிராமியத் தெய்வங்கள் - குடும்பங்களின் பெருக்கம், பொருளாதார வளர்ச்சி போன்ற காரணிகளால் கோயில் நிலையை அடையும் போது ஆகமம் சார்ந்த குருமாரின் வழிப்படுத்தலுக்கு உட்படுகின்றன. சமூக மட்டத்தில் தமது மேட்டிமை நிலையைப் புலப்படுத்தும் நோக்குடன் கிராமிய வழிபாட்டில் இருந்து ஆகமம்சார் குருமாரை வைத்துப் பூசை செய்விக்கும் நிலைமைக்கு ஆலயங்கள் இட்டுச் செல்லப்பட்டன. இதனால், கிராமியத்தெய்வங்களைப் புறமொதுக்கி ஆகமம்சார் தெய்வங்கள் மூலஸ்தானத்தில் இடம்பிடிக்கும் நிலையும் காணப்படுகின்றது.

நாச்சியார் - நாச்சிமார் ஆகிய இரண்டு சொற்களையும் ஒரு பொருள் சொற்களாகவே கொள்வர். நாச்சியார் என்பதற்கு அரசி, தலைவி எனப் பொருள் விளக்கம் கொள்ள முடியும். நாச்சி என்ற உயர்திணைப் பெயர்ச்சொல்லுக்கு “மார்” என்ற உயர்திணைப் பன்மை விகுதி சேர்ப்பதனால்

பெறப்படுவதே நாச்சிமார் என்ற சொல் ஆகும். எனவே இது ஒரு தொகுதி (எழுவர்) பெண் தெய்வங்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியும். நாச்சி என்ற சொல் "நீ" என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடியாகப் பிறந்ததாகக்கொள்வர். "நீ" என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு வழிகாட்டுதல் என்ற பொருள் உண்டு. எனவே நாச்சி என்பதற்கு வழிகாட்டுபவள் எனப் பொருள் கொள்ள முடியும். நாச்சி என்பதன் எதிர்ப்பால் சொல் நாயன் என்பதாகும். இது வழிகாட்டுபவன் என்ற பொருளைத் தரும். இதில் இருந்தே வழிகாட்டுவோர் என்ற பொருளில் நாயன்மார் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.

கிராமிய வழிபாட்டில் இயற்கையைப் பெண்ணாகக் கண்டு முதன்மைப்படுத்தும் போது நாச்சியார் என முதன்மைப்படுத்தும் தன்மை காணப்படுகின்றது. கடலைக் கடல் நாச்சியார் எனவும் சமையல் மேற்கொள்ளும் அடுப்பை அடுப்பு நாச்சியார் எனவும் அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. ஊரில் உள்ள உயர் குழாஅத்தைச் சேர்ந்த பெண்களை "நாச்சியார்" என மரியாதை கொடுத்து அழைக்கும் வழக்கமும் உண்டு. திருப்பாவை பாடிய கோதையார் அல்லது ஆண்டாள் - நாச்சியார் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்து மரபில் உள்ள அடுப்பு நாச்சியார் வழிபாடு பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு நாச்சி என்னும் தெய்வத்தை வணங்குவர். இவ்வழிபாடு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் தொடங்கியது. நல்லநாள் பெருநாள் வந்தால் வீட்டிலே தேடும் பலகாரத்தில் முதற்பலகாரத்தை அடுப்பு நாச்சிக்கென நேர்ந்து அடுப்புக்குள் போடுவர். அதன் பின்னரே தமது தேவைக்கு எடுப்பர். கலியாண வீடு முதலிய கொண்டாட்டங்களுக்குப் பலகாரங்கள் தேடும் போது அவ்வாறே செய்வர். சிறு குழந்தைகளுக்கு வாயவிச்சல் போன்ற வருத்தங்கள் வந்தாலும் கஞ்சி வடிக்கும் போது அது உடம்பில் ஊற்றுப்பட்டாலும் அடுப்பு நாச்சிக்கு, சமைக்கும் பொருள்கள் யாவற்றையும் வெற்றிலை பாக்குடன் வைத்துப் படைப்பர். படையல் மாற்றும் போது படைத்த பொருள்கள் ஒவ்வொன்றைக் கிள்ளி அடுப்புக்குள் போடுவர். அதன் பின்னர் அங்கு செம்பில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரைப் படையல் பொருள்களின் மேல் தெளித்துப் படையலை மாற்றுவர்." எனக் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் நாச்சிமார் வழிபாடு - யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமே பெருவழக்குப் பெற்றிருக்கின்றது. இது பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.
"வன்னி நாட்டை அரசாண்ட வன்னித் தலைவியர் எழுவர், அக்காலத்தில் ஒல்லாந்தரோடு பெரும்போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனர். அதனால் தாம் மாற்றார் கைப்படலாகாது என்னும் எண்ணத்துடன், நஞ்சுண்டு இறந்தனர். எனவே தமிழ் மக்கள் அவர்களை வீரத்தெய்வங்களாக்கி இன்றும் வணங்குகின்றனர்." என்கிறார். இவ்வாறான வீரப்பெண்களைச் சப்த கன்னியர் எனப் போற்றும் வழக்கமும் காணப்படுகின்றது. இவ்வாறான ஆலயங்களில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் விளக்கு வைத்து வழிபடும் முறை காணப்பட்டது. அத்துடன் வருடத்தில் ஒரு நாள் பொங்கலிடும் வழக்கமும் காணப்பட்டது. இங்கு பறை முழக்கும் போது ஏனைய கோயில்களில் பறை முழக்குவதில் இருந்து வித்தியாசப்படுத்தி முழக்கும் தன்மை காணப்பட்டது. பறையை நிறுத்தி நிறுத்தி ஏழுதடவைகள் முழக்கும் தன்மையே அது. ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு நாச்சியாருக்கென்று கருதுவர்.

ஈழத்தில் சிறுதெய்வ வழிபாடு பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம், நாச்சிமார் வழிபாடு நடுகல் வழிபாட்டுடன் இணைந்ததொன்றாக வன்னி மக்களால் பேணப்பட்டு

வந்ததாகக் குறிப்பிடுகின்றார். "வன்னியனார் அறுவர் வன்னியில் தனியரசு நடத்தி வந்தனர். அவர்கள் தலயாத்திரையின் பொருட்டுச் சென்ற போது அவர்களின் எதிரியான நம்பி என்பான் பறங்கியரின் உதவியுடன் வன்னியின் மேல் படையெடுத்தான். இப்படையினை வன்னியரின் ஆறு நாச்சியரும் பணிப்பெண்ணாகிய பொன்னாச்சியும் இணைந்து எதிர்த்தனர். படைவலிமையின் முன் நிற்கமுடியாத இம்மாதவர்கள், தம் கற்பினைக் காக்கும் பொருட்டுத் தாமே தம் உயிரைப் போக்கினர். இவர்களின் வீரத்தையும் கற்பினையும் மனங்கொண்ட மக்கள் இவர்களைத் தெய்வமாகப் போற்றினர்." எனக் குறிப்பிடுகின்றார். இந்த மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் வேறு பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்த போது தமது வழிபடு தெய்வமாகிய நாச்சியாருக்குக் கோயில் அமைத்து வழிபாடாற்றினர் எனக் கருத முடியும்.

நாச்சிமார் கோயில்கள் ஆகம வழிபாட்டு மரபுகளுள் உள்வாங்கப்பட்டபோது காமாட்சி அம்மன் ஆலயங்களாகவும் மனோன்மணி அம்மன் ஆலயங்களாகவும் இன்னும் வேறு ஆகம முறையான பூசைகளுக்கு உட்படக்கூடிய அம்மன் ஆலயங்களாகவும் பெயர்மாற்றம் பெற்றன. எது எவ்வாறெனினும் மூலவராகத் திகழும் இறை ரூபத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் மக்களின் நம்பிக்கை மரபார்ந்த கிராமியத் தெய்வத்தின் பெயரிலேயே அமைந்திருக்கின்றது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் - கருவறையில் மனோன்மணி அம்மனாக அமைக்கப்பட்டாலும் மக்கள் கண்ணகியாகவே கண்டு வழிபடுகின்றனர். வண்ணை நாச்சிமார் ஆலயத்தில் காமாட்சி முதன்மைப்படுத்தப்பட்டாலும் மக்கள் நாச்சிமார் கோவில் என்றே அழைக்கின்றனர். இது அடியவர்களின் எண்ணத்தில் ஆழ ஊன்றியுள்ள தம் முன்னோர் வழிபாட்டு நெறியினால் ஏற்பட்ட உணர்வுநிலை என்றே கருதவேண்டியுள்ளது.

உசாவியவை:


ஞானவேல். ந. - வன்னிமண்ணில் சிதைவுறும் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள்,
சுதந்திர இலங்கையின் ஐம்பதாவது ஆண்டுச் சிறப்பு மலர்,
வடக்கு கிழக்குமாகாண சபை, *1998*

கணபதிப்பிள்ளை. க.,- ஈழத்து வாழ்வும் வளமும்,
பாரி நிலையம், சென்னை, *1962*

கனகரத்தினம், இரா.வை., - ஈழத்து நாட்டார் வழிபாடு,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், *2016.*


## வழிபடுநேரம்

வேலைக்குப் போகும் அல்லது வேலையால் வரும் வேளைகளில் சிலர் கோயிலுக்குச் சென்று வழிபடுகிறார்கள். நேர அவகாசம் கருதி வேகமாக வலம் வருகிறார்கள். பொருத்தமான ஆடை அணியாது செல்கிறார்கள். இவை யாவும் தவறானவை; தவிர்க்கப்படவேண்டியவை. கோயில் சென்று வழிபட ஒரு முறை இருக்கிறது. அதைக் கடைப்பிடிப்பது அவசியம்.

இறைவனை வணங்குவது கடையிலே போய்ப் பொருள்கள் வாங்குவது போன்ற செயல் அன்று. அதற்கென நேரம் ஒதுக்கி, ஆறுதலாக, ஆசாரமாகச் சென்றே கோயிலில் வழிபடவேண்டும்.

அப்படிச் செய்ய இயலாதவர்கள் வீட்டிலேயே இருந்து இறைவனை இறைஞ்சலாம்

# கர்மவீரர்கள்

## கந்தபுராணச் சிந்தனைகள்

எம்முடைய ஊர்களிலே எண்ணிக்கையினால் பெரிய குடும்பங்கள் சில பொருளாதார வசதி குன்றிய நிலையிலே தத்தளித்துக்கொண்டிருக்கும். அந்த நேரத்திலே பெரியவர்களின் வழிகாட்டலினாலோ அல்லது சுய சிந்தனையினாலோ அந்தக் குடும்பத்திலே அறிவும் ஆற்றலும் கூடிய ஒருவர், ஒழுக்கசீலராக நின்று தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்து அந்தக் குடும்பத்தை அழிவின் வாய் நின்றும் மீட்டெடுத்துப் பெருவாழ்வுக்கு இட்டுச்செல்வர். தியாகத்தின் சிகரமான இவர்கள், நடு நிலைமை தவறாத பெரியவர்களாகத் திகழ்ந்து, அல்லது வயோதிப கன்னிகாஸ்திரியாகவோ வாழ்வை முடிக்கின்றனர். இவர்கள் எவர்மீதும் தனிப்பிரியம் காட்டாது அன்பாக இருப்பார்கள். இந்தக் கர்மவீரர்கள் எவ்வாறு உருவாகத் தொடங்கினார்கள் என்று சிந்தித்தால் கந்தபுராணம் இவர்களுக்கு வழிகாட்டியிருப்பது புலப்படும்.

அசுரகுலம் மிகவும் பலவீனமடைந்துவிட்டது. பல அசுரர்கள் தேவர்களினால் கொல்லப்பட்டுவிட்டனர். அந்த நிலையிலே, அசுர குலத்திலே சுரசை என்று ஒரு வல்லமை மிக்க பெண் பிறக்கிறாள். அசுர குருவாகிய சுக்கராசாரியார் மாயையின் கல்விகள் அனைத்தையும் அவளுக்கு உணர்த்தி அவளுடைய கல்வித்திறத்தை நோக்கி அவளுக்கு மாயை என்று பெயரும் இட்டார். பின்பு அசுரர் களின் சிறுமையையும், தேவர்களுடைய பெருமையையும், தேவர்கள் அசுரர்களால் வருந்தும் வண்ணம் திருநந்திதேவர் சபித்ததையும் சிந்தித்தார்.

**Dr க சிவலோகநாதன்**

அவர் மாயையைப் பார்த்து, “அசுரகுலம் உன்னால் மேம்படவேண்டும். அதற்காக நீ திருமகளும் வந்து வணங்கற்பாலதாகிய பேரழகை உடைய ஓருருவத்தோடு போய்க் காசிப முனிவரை அடைந்து உன் வல்லபத்தைக் காட்டி, இரவிலே அவரோடு கூடி, அசுரர்களை உண்டாக்கி அவர்கள் எல்லையில்லாத வளங்களைப் பெறும்பொருட்டுச் செய்யப்படும் யாகங்களையும், தவங்களையும் உணர்த்தி மீள்குதி” எனக் கூறி விடுகின்றார். இவ்வாறு சொல்லக்கேட்ட மாயை, “அசுரகுலம் மேம்படுவதற்காக நீங்கள் இவ்வாறு சொன்னீர்கள். உங்கள் வாக்கின்படியே செய்கிறேன்” என்று சொல்லி விடைபெறுகின்றார்.

இதன் பிறகு மாயை காசிப முனிவருடன் கூடிச் சூரன் முதலாம் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள். மாயையின் அறிவுறுத்தலினாலும், பொருளுதவியினாலும் சூரனும் தம்பிமாரும் பெருவேள்வி செய்து சிவபெருமானிடம் அளப்பரிய வரங்கள் பெறுகின்றனர். வரம் பெற்ற சூரனும் தம்பிமாரும் தந்தையாகிய காசிப முனிவரிடம் போய் அவரை வணங்கி அவருடைய நெறிப்படுத்தலின் பேரில் சுக்கிராசாரியாரிடம் உபதேசம் பெறுகிறார்கள். சுக்கிராசாரியார் செய்த உபதேசப்படி சூரன் திக்குவிஜயம் செய்யப் புறப்படுகின்றான். அப்பொழுது மாயை வருகின்றாள். சூரபன்மன் அவளை முன்னே கண்டு தம்பியாரோடும். அசமுகியோடும் வணங்கினான். அவள் பெற்ற அற்றை நாளிலும் மகிழ்ந்து ஆசீர்வதித்து, “யாகத்தில் நிகழ்ந்தனவற்றையும் அதற்காகச் சிவபெருமான் கொடுத்தருளிய வரங்களையும் கேள்வியுற்று அன்போடு உங்களைக் காண வந்தேன். நீங்கள் வலிமையினால் இந்திரன் முதலியோரை வெல்லுங்கள். வென்று எவ்வுலகையும் ஆண்டு பூமியில் என்றும் வாழுங்கள், மாயைகள் வேண்டினால் என்னை அன்போடு நினையுங்கள். அப்பொழுது யான் வந்து நீவிர் விரும்பியவற்றைச் செய்துமுடிப்பேன். விருப்பத்தோடு உம்மைக் காணும்படி வருவேன். நீவிர் ஒற்றுமையாய் இருக்குதிர்.” என்று சொல்லிப் புத்திரர்கள் வணங்கப் போயினாள்.

ஆசி கூறியே வேள்வியிற் செய்கையும் அதனுக்
கீச நல்கிய வரங்களுங் கேட்டனன் ஈண்டு
நேச மோடுமைக் காணிய வந்தனன் நீவிர்
வாச வன்முதல் வோர்தமை வெல்லுதிர் வலியால்

திக்குவிஜயப் படலம் 6

மாயை அவர்களோடிருந்து அவர்கள் பெற்ற வரங்களை அநுபவிக்கவில்லை. அவள் கட்டுப்பாடாக வாழ்ந்தாள். அவள் பிள்ளைகளோடும், பேரப் பிள்ளைகளோடும் அன்பாக இருந்தாள். ஆனால் சூரனுடைய ஆட்சியில் கலக்கவில்லை.

யுத்தம் தொடங்கிவிட்டது. பானுகோபன் முதல்நாள் யுத்தத்திலே தோற்றுப்போய்விட்டான். இரண்டாம் நாள் யுத்தத்திலே சூரபன்மன் தோற்றான். மூன்றாம் நாள் பானுகோபன் யுத்தத்துக்குப் புறப்படுமுன்னர் மாயையை நினைக்கிறான். வந்த மாயையிடம் தான் வீரபாகுதேவரிடம் தோற்றுப்போனதைச் சொல்லி அவரை வெல்லும் வழி கேட்கிறான். அவள் அவனைப் பார்த்து, "நீ வேதமார்க்கத்தினை விலக்கினாய். தேவரைச் சிறையிலே அடைத்தாய். இந்திரன் முறைமைகளை அழித்தாய். முனிவர் செய்யும் தவங்களைக் குறையும்படி செய்தாய். கொடுமைத் தன்மையை மேலானது என எண்ணிவிட்டாய். இடைவிடாது உயிர்கள் போற்றும் திருமூர்த்திகளும் உனக்குப் பகைவரானால் , முனிவருடனே தேவர்களும் பகைவரானால் , வானிலுள்ள எல்லோரும் பகைவரானால் நீ எவ்வாறு உயிர் வாழ்வாய்? தவறான கொடிய வழியையே தொடர்ந்தும் பின்பற்றியதால் பழியினை நீ அடைந்தாய். அதனால் பகைவர் இந்நகரத்துக்கு வந்து போர் செய்ய அவர்களுக்குத் தோற்றாய். செய்த விதியினை எவர்தாம் கடந்தார்" என்று சொல்கிறாள்.

பிழைத்திடு கொடுநெறி பெரிதுஞ் செய்தலால்
பழித்திறம் பூண்டனை பகைவர் இந்நகர்
அழித்தமர் இயற்றிட அவர்க்குத் தோற்றனை
இழைத்திடும் விதியினை யாவர் நீங்கினார்

மூன்றாநாட் பானுகோபன் யுத்தப்படலம் 7

இவ்வாறு சொன்ன மாயை அவனுக்கு ஒரு படைக்கலத்தைக் கொடுத்து இதைச் செலுத்து. இன்றைய வெற்றி உன்னதாகும் எனச் சொல்லிச் செல்கிறாள்.


இதேபோன்று யுத்த களத்திலே பிள்ளைகள், சேனைகள், அமைச்சர்கள், தம்பி சிங்கமுகாசுரன் எல்லோரையும் இழந்து தனியனாகி நிற்கின்றான், சூரன். மாயையை நினைக்கிறான். மாயை வருகின்றாள். என்ன வேண்டும் எனக் கேட்கிறாள். "தாயே வீரத்தையுடைய தம்பியாரும், மைந்தரும், அமைச்சரும், படையும் எல்லாம் அழிய நான் ஒருவன் மட்டும் அழியாது இருக்கிறேன். இறந்தவர் அனைவரும் உயிர்பெற்று எழ வழியினை உரைப்பாயாக" என்று சொல்கிறான். கேட்ட மாயை, "மைந்தா! நீ உனக்குள்ள படைகள், சுற்றத்தினர் என்ற எல்லோரும் இறக்கத் தனித்தவனாகியும் தேவரைச் சிறை விடுப்பதைப்பற்றி நினைத்தாயில்லை. இன்னும் ஆறுமுகப் பெருமானுடன் போர் செய்ய எண்ணுவாயானால் நிறைந்த பெரிய செல்வத்தை இழந்தவன் ஆலாய்." என்கிறாள். சொன்ன மாயை இறந்தவர்களை எழுப்பும் யுக்தியையும், சொல்விட்டுச் சென்றுவிடுகிறாள். சூரன் அவளுடைய யுக்தியைப் பாவித்து இறந்தவர்கள் எல்லோரையும் எழுப்பினான். ஆனால் முருகப் பெருமான் அவர்களையும் அழித்து மாயை கூறியதுபோல் சூரனையும் தன்கை வேலால் அழித்தார்.

இவ்வாறாக அசுர குலம் தழைக்கப் பெரும் பங்காற்றிய மாயை பின்னர் ஒதுங்கி வாழ்ந்ததையும் பிழைகளைச் சுட்டிக் காட்டியதையும் கந்தபுராணம் தெளிவாகச் சொல்கிறது. இதன்மூலம் சைவத் தமிழ்க் கலாசாரத்தில் கர்மவீரர்கள் ஓர் இலட்சியத்துக்காக மாத்திரமே வாழவேண்டும் என்றும், அதை அடைவதனால் கிடைக்கும் போகத்தில் ஆளக்கூடாது எனவும் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

## தனக்கு நேரிலான் திருவடியை நாடிய

# வேதாகம பூஷணம், சிவாகாமக்கிரியா ரத்தினம்

# இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள்



"சிவனுறையும் கோயில் சூழ்ந்து, தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ".

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கீரிமலையில் ஆதியில் அமைந்த திருத்தலம் கீரிமலைச் சிவன்கோயில். திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்ட அக்கோயில் கடலில் அமிழ்ந்துபோக இரண்டாவதாக அமைக்கப்பட்ட கோயிலும் 1621 இல் போர்த்துக்கேயரால் தரை மட்டமாக்கப் பட்டது. 1803ஆம் ஆண்டு அரோ சிமித் (Arrow Smith) என்பவரால் வரைந்து குறிப்பிடப்பட்ட "இலங்கையில் உள்ள ஸ்தலங்களும் குளங்களும்" என்ற படத்தில் முதலாம் இலக்கத்தில் குறிப்பிடப்படுவது நகுலேஸ்வரம். நகுல முனிவர் தொடர்பால் ஏற்பட்ட பெயர் அது.

எமது நாட்டின் சைவசமய மீளெழுச்சியில் பெரும் பங்காற்றிய ஆறுமுகநாவலர் அவர்கள் 24.05.1878 இல் கீரிமலையில் சிவன்கோயில் அமையவேண்டிய அவசியத்தை ஒரு துண்டுப் பிரசுரம் மூலம் வலியுறுத்தினார். அக்கோரிக்கை சைவமக்களால் கோயில் அமைக்கப்பட்டு 1895 இல் சிவலிங்கப் பிரதிஷ்டையுடன் கும்பாபிஷேகம் நடைபெற ஏதுவானது. நகுலேஸ்வரத்தில் மீண்டும் நித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கியபோது சிவஸ்ரீ தி. குமாரசாமிக்குருக்கள் அவர்கள் ஆதீனகர்த்தாவாக அமைந்தார். காலம் நகர்ந்தது .

1925ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் பூச நட்சத்திரத்தில் குமாரசாமிக்குருக்களுக்கும் அவர்தம் துணைவியார் அன்னம்மாளுக்கும் புத்திரராக, ஞானத்தின் திருவுருவாய் வளரப்போகும் ஒரு பிள்ளை சுப ஜனனம் பெற்றது. மூர்த்தியின் பெயரே தன் பெயராகக் கொண்டு அர்த்தமுள்ள வாழ்வு வாழப்போகும் குழந்தைக்கு மிகப்பொருத்தமாகவே நகுலேஸ்வரர் என்று பெயரிட்டனர். பேரனாராகிய மாவிட்டபுரம் இரத்தினக் குருக்கள் அவர்களின் அரவணைப்பில் நகுலேஸ்வரர் மழலைப் பருவத்தைக் கழித்தார் .

திருமதி கோகிலா மகேந்திரன்

கீரிமலையில் இருந்து தென்கிழக்கே மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த விழிசிட்டி சிவஞான வித்தியாசாலையில், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை அவர்களின் கவனிப்பில் தனது கல்வியை ஆரம்பித்த இப்பிள்ளை, தொடர்ந்து காங்கேயன்துறை நடேஸ்வராக் கல்லூரி முதல்வர் சந்திரசூடாமணி ஐயரிடம் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். அதன் பின் மரபுப்படி குருகுலக் கல்வியைத் தொடர்ந்தார்

கீரிமலை ஆலயத்தின் மேற்கு வீதியில் அப்போது இயங்கி வந்த சமஸ்கிருத ப்ராசீன பாடசாலையில் மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்ப ஐயரிடமும், தமது தந்தையாரிடமும் வடமொழிக் கல்வியூடாக வேதம், ஆகமம், அமரம், காப்பியம் தர்மசாஸ்திரம் போன்ற விடயங்களை நிறையவே கிரகித்துக்கொண்டார். தந்தையாருக்கு உதவியாக இருந்து கோயில் கிரியைகள், பத்தி வாசித்தல் போன்றவற்றிலும் அநுபவத்தைப் பெற்றுக்கொண்டார்.

1946ஆம் ஆண்டு இவருக்குச் சிவாச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டது. 1947ஆம் ஆண்டில் தந்தையார் சிவன் நிழலை அடையவும் சட்டப்படியும் குலாசார முறைப்படியும் நகுலேஸ்வர ஆதீனத்தின் வாரிசாக அமைந்தார். அப்போது அவரது வயது 22 மட்டுமே! .கட்டிளமைப் பருவத்தை மட்டு மட்டாகக் கடந்த வயது என்றாலும், அன்று முதல் ஆதீன வளர்ச்சியில் சிந்தை லயித்துக் கருமமாற்றத் தொடங்கினார். மாமனாரின் வழிகாட்டலும் பெரியோர்களின் உறுதுணையும் அவரை வழிநடத்தின.

1933 முதல் எனது பெற்றோர் இவ்வாலயத்துக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வந்தனர். சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் அவர்களின் ஆலோசனையின்படி பிள்ளைவரம் வேண்டி மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் அர்ச்சனைக்குச் செல்வர். பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை அவர்களின் குடும்பமும் அன்றைய தினம் அங்கு வருவர். தந்தையார் சோமவாரத்தின் மாலைப்பூசைக்கும் விசேடதினங்கள் எல்லாவற்றுக்கும் கட்டாயம் செல்வார். ஆலயத்தில் அவருக்கெனப் பல கடமைகள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

தந்தையார் நகுலேஸ்வரக் குருக்களை விடப் பத்து வயது மூத்தவர். ஆயினும் இருவருக்கு மிடையில் புரிந்துகொள்ளக் கடினமான பரஸ்பர மரியாதையும் நட்பும் அன்பும் இருந்தமை எனக்குத் தெரியும். அப்பா காலமான பிறகு அவர் விட்டுச் சென்ற குருக்களின் கடிதங்கள் சில எனது எண்ணத்திற்குச் சான்றாக இருந்தன. குருக்கள் கேட்ட எதையும் அப்பா மறுத்ததில்லை.

1950ஆம் ஆண்டு நான் பிறந்தேன். நகுலேஸ்வர சுவாமி மீதும் குருக்கள் மீதும் இருந்த நம்பிக்கை இன்னும் பலமடங்காகக் கோயில் என்றால் அது கீரிமலையே என்பதுபோல் நான் வளர்ந்தேன். 1953 இல் பல சகாப்தங்களின் பின் தேவஸ்தானத்தில் கும்பாபி'கம் நடைபெற்றது. 1954 முதல் நகுலேஸ்வரப் பெருமானுக்கு மகோற்சவமும் 1961 முதல் நகுலாம்பிகைக்கு மகோற்சவமும் நடைபெறத் திருவருள் பாலித்தது. சிவராத்திரி தினத்தில் தேர்த்திருவிழா அமையும்படி சிவனுக்குப் பதினைந்து நாள் உற்சவம் நடைபெறும். அதில் நாலாம் திருவிழா விழிசிட்டியில் எமது உறவினர்கள் பலரும் சேர்ந்து உபயம். அந்த நாளுக்கான ஆயத்தங்களும் அந்த நாளும், விழிசிட்டி வீடுகளிலும் திருவிழாதான். சித்திரை வருடப்பிறப்பன்று தேர் அமையும்படி தேவிக்குப் பன்னிருநாள் உற்சவம். ஆதீன முதல்வர் நகுலேஸ்வரக் குருக்கள். நிர்வாகஸ்தரும் அவரே; உற்சவ ஆசார்யாரும் அவரே! அந்தணருக்குரிய ஆடை அழகாகத் தரித்து, செம்மையாக அவர் செய்யும் ஸ்தம்ப பூசை, வசந்த மண்டபப் பூசை ஆகியவற்றைக் காண ஆயிரம் கண் வேண்டும். மந்திர உச்சாடனம் செய்யும்போது "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து" சொல்லும் சிறப்பு மெய்சிலிர்க்க வைக்கும். அவர் மனம் எப்போதும் ஆதீன வளர்ச்சியில்!

ஆலய உட்சுவர்களில் புராண வரலாறுகளைச் சித்திரிக்கும் படங்களை வர்ண மைகளால் தீட்டி ஆலயத்தோற்றத்தை அழகுறச் செய்தமை அப்போது பலரின் பாராட்டையும் பெற்றது. ஓவியர் ஒருவரே அவற்றை வரைந்தார் என்றாலும் குருக்கள் அவர்களும் கூட இருந்து தூரிகை பிடித்தார் என்பது குறிப்பதற்குரிய செய்தி.

சிவராத்திரி முழுஇரவும், புரட்டாதிச் சனி, ஆடி அமாவாசைத் தினங்களில் முழுப்பகலும் அப்பாவின் காலம் கோயிலில் கழியும். தேவாரம் ஓதல் உட்படக் குருக்கள் சொல்லும் பணிகளை முழுமையாக நிறைவேற்றி வீடு திரும்புவார்.

காலப்போக்கில் தேர், வாகனங்கள், சப்பரம் முதலியன புதிதாக அமைக்கப்பட்டு, உப அங்கங்களான சுற்றுமதில், நீர்த்தாங்கிகள், நந்தவனம் ஆகியனவும் நிறுவப்பட்டன. நந்தவனம் என்றேனா? தெற்குப்புற வீதியின் அருகில் அமைந்த குளத்தில் செங்கழுநீர் பூத்திருக்கும் அழகைச் சிறுவயதில் நீண்டநேரமாய் நின்று பார்த்த ஞாபகம் என்மனதில்! அர்ச்சனைத் தட்டுத் திரும்பிவரும்போது செங்கழுநீர்ப் பூக்களும் வரும் என்று காத்திருந்த பொழுதுகளும் பசுமையானவை.

கோயிலின் தலவிருட்சம் ஜம்புநாவல். கோயிலின் வடமேற்கு மூலையில், சனைச்சரர் வாசலுக்கு அருகே நின்ற ஜம்புநாவலின் பழங்களும் நாலு, ஐந்து வயதில் கோயிலுக்குப் போகும் என் ஆர்வத்தைத் தூண்டின என்பது மெய்யே.

தந்தையார் கீரிமலையில் புராணபடனம் செய்யும் வழக்கமுடையவர். அதன் விரிவாக 1980 இல் அவர் எழுதி வெளியிட்ட நகுலகிரிப்புராண உரைநூலுக்கு அரசின் சாகித்ய விருது கிடைத்தது. அதனால், கோயில் மீதான நம்பிக்கை இன்னும் வலுவடைந்தது.

குருக்களின் மனதில் எப்போதும் மிதந்துகொண்டிருந்த ராஜகோபுரத் திருப்பணி வேலைக்கான அத்திவாரம் 1982 இல் இடப்பட்டது. 1984 சிவராத்திரி நிகழ்வில் எமது மகன் பிரவீணன் தனது மூன்றாவது வயதில், குருக்களின் முன்னிலையில், கன்னிப்பேச்சை நிகழ்த்தி முதலாம் பரிசை வென்றார். அவரது சுயநம்பிக்கை விருத்தியிலும் கோயில் முதலிடம் பெற்றது.

கோபுரவேலைகள் 16 அடி வரை வந்துவிட்டன. நாட்டின் நிலை 1986, 87 இல் இருந்து மோசமடையத் தொடங்கியது.1990 இல் வலிவடக்கு இடப் பெயர்வைச் சந்தித்தது. 1990 ஒக்டோபர் மாதம் 16ஆம் தேதி கேதாரகௌரி விரதநாளில் பக்தர்கள் கௌரி நூல் பெற்றுக் கொண்டிருக்கும்போது விமானக் குண்டுகள் வீசப்பட்டதில் சிலர் காயமடைந்ததுடன் கோயில் அழிவுக்குள்ளானது

.

2009 இல் உள்நாட்டுப் போர் நிறைவுபெற்றபின் கோயில் மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் அமையப்பெற்றாலும் அந்த இடையில் வந்த இருபது வருடங்களில் குருக்கள் பட்ட நெருக்கீடுகளும் சலிப்புறாத முயற்சிகளும் தனிக் காவியமாக எழுதத் தக்கன. அவர் தன் வீட்டைத் திருத்தி அமைப்பதில் அக்கறை செலுத்தவில்லை. முதுமையிலும் ஒருமுனை மனோதிடத்துடன் செயற்பட்டு கோபுர வேலைகளை நிறைவுசெய்தார். 01.07.2018 ஞாயிறு காலை நவதள, நவகலச சகித சிவமகா ராஜகோபுரப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றபோது, அவர் தன் வாழ்நாள் இலக்கைப் பூர்த்தி செய்து சுயதிறன் நிறைவு பெற்றார் எனலாம். அப்போது அவர் வயது 93. முச்சக்கரவண்டியில் ஏறி கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தை விநியோகம் செய்தார். உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை இருந்து ஓம்பி வந்த அவர், 15.07.2023 சனிப்பிரதோஷ நாளில் தனது 98 ஆவது வயது நிறைவுற்ற நிலையில், “புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்” என அவர் சிவன் நீழலை அடைந்து இன்புற்றார்.

கீரிமலையில் ஒரு சகாப்த சரித்திரம் நிறைவு பெற்றது .




ஊரின் பெயரே உயரத்தில் வீற்றிருக்கும் நாயகன் முருகனின் உன்னத ஆலயத்தின் பெயரும் ஆகும். பழனி = பழம் + நீ, பழம் = ஞானப்பழம், நீ = முருகன்
ஆற்றுபடை வீடுகளில் பழனி ஞான வீடாகும்.
அரும்பு = சரியை, மலர் = கிரியை, காய் = யோகம், பழம் = ஞானம்

பழனியைப் பற்றோடு பூசித்தால் மனமும் பழுத்துவிடும். "பாடாத ஊமரும் சூடாத முடவரும் பாடி ஆடும் பழம்பதி பழனி. காயா? பழமா? என்று கேட்கும்போது பழம் என்றால் நினைத்த காரியம், - பூர்த்தியானதுதான் பழம். தமிழ் நாட்டில் அதிக வருமானம் கொடுக்கும் ஆலயம் பழனியே!

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

பழனிமலை அடிவாரத்தில் இருக்கும் திருவாவினன்குடி ஆலயம் தான் மூன்றாவது படைவீடாகும். திரு+ ஆ+ இனன்+ குடி = திருவாவினன்குடி, திரு = மகாலட்சுமி, ஆ = காமதேனு, இனன் = சூரியன், கு = பூமாதேவி, டி = அக்னி. இம்மூவரும் பூசித்ததால் திருவாவினன்குடி என்ற நாமம் பெற்றது.

குழந்தை வேலாயுத சுவாமியாக முருகன் மயிலின் மீது அமர்ந்து காட்சியளிக்கிறார். சகல சித்தி களையும், முத்தியையும் அவர் தரவல்லவர். இந்த ஆலயம் கோபுரமும், கொடிமரமும் கொண்ட ஆலயமாகும். திருவிழாக்கள் நடைபெறுவது உண்டு. தைப்பூசம் போன்ற முருகனின் விசேட நாள்களில் விமரிசையாக விழாக்கள் நடைபெறும்.

திருவாவினன்குடி கோயிலின் வடகிழக்குத் திசையில் சரவணப் பொய்கை உள்ளது. இதில் முதல் நீராடி குழந்தை வேலாயுத சுவாமி அருள் பெற்று மக்கள் மலை ஏறிச் செல்வர்.

திருவாவினன்குடி தலத்தில் அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் அங்கு ஜெபமாலை அளித்தார்.

"ஜெபமாலை தந்த சற்குருநாதா, திருவாவினன்குடிப் பெருமாளே" - (அபகார நிந்தை) திருப்புகழ். பழனித் தலம் மீதுதான் அருணகிரிநாதர் அதிக (95) திருப்புகழ்கள் பாடியுள்ளார். நக்கீரரும் பழனியைப் பாடியுள்ளார்.

கிரிவலம் : "விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்" (உனைத்தினம்) திருப்புகழ்.
பழனிமலை கிரிவலம் சுமார் ஒருமைல் தூரமானது. இது பாத விநாயகர் கோயிலிலிருந்து ஆரம்பிக்கிறது. விநாயகரை வணங்கி, பின்னர் கிரிவலம் வரும்போது பல மூலிகைகளின் நறுமணங்கள் நலம்பெறச் செய்யும். பல கோயில்களையும் எதிர்கொண்டு தரிசித்து மக்கள் செல்வர்.

முருகனுக்கு உகந்த கடம்ப மரம் வைகாசி மாதத்தில் தான் பூப்பது. மக்கள் இதனால் வைகாசி மாதத்தை விரும்பி கதம்ப மலரை அணிந்து வலம் வருவர்.

முடி மொட்டை அடிக்க விரும்புவோர் இலவசமாகவே இங்கு அடிக்கலாம். இதைவிட, குளிக்க, ஆற, தங்க இலவச வசதிகள் உள்ளன. அன்னதான இடங்கள், இலவச பாதணிகள் வைக்கும் இடம், இலவச மோட்டார் வாகனத் தரிப்பிடம் என யாவும் இலவசமே! இவை பழனி முருகனின் பேரருளோ என வியக்க வைக்கும்.



பௌர்ணமி தினத்தில் வலம்வருவது விசேடமாகக் கருதப்படுகிறது. மேலும், திங்கட்கிழமை ஒன்பது முறை வலம் வந்தால் அறிவு பிரகாசம் பெறும் என்பர். செவ்வாய் - பூமி பிரச்சினை தீரவும், புதன் - வியாபாரம் துலங்கவும், வியாழன் - தொழில் சிறப்புறவும், வெள்ளிக்கிழமை - ஆடை ஆபரணம் பெறவும், தடைபெற்ற திருமணங்கள் நடைபெறவும் எனக் கருதி இவ்வாறு வலம் வருவர். பாதவிநாயகர் கோயிலிலேயே வலம் பூர்த்தியாகும். பழனி ஆண்டவரின் விசே டமான பிரசாதமும் கிரிவல முடிவில் கிடைக்கும்.

தண்டாயுதபாணி ஆலயம் :

மலையின் உச்சியில் 450 மீட்டர் உயரத்தில் இருக்கிறது. 690 படிகள் மூலம் பாதயாத்திரை, காவடி எடுப்போர் வழிபடச் செல்வர்.

**தண்டம் என்றால் கம்பு. எப்படி ஒரு எலும்புச் சிகிச்சை நிபுணர் கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டு நம்மைச் சோதித்துப் பார்த்து நமது நோய்களை அறிந்து அவற்றைக் குணப்படுத்துகிறாரோ, அதுபோன்று நமது கர்ம பலன்களை அறியச் செய்து, அவற்றைக் களையும் கந்தன் எடுத்த கோலமே ஆண்டிக் கோலம்.**

**- அறிவோம் ஆன்மிகம்**

பழனிமலை நடந்து சென்றால் கவலை சேராது - தமிழ்ப்
பாட்டிசைத்து மகிழ்ந்து சென்றால் பயம் வராது
அழகு மணி வேல் முருகன் ஆவல் தீராது - அவன்
அருளில்லையேல் விடிவதற்குச் சேவல் கூவாது (முருக பஜனை)

இராஜகோபுரம் ஐந்து நிலை கொண்டு அழகிய சிற்பவேலைகளோடு காட்சியளிக்கிறது. இதைத் தரிசித்து உட்சென்றால் பாரவேல் மண்டபமும், நவரங்க மண்டபமும் காணலாம். நவரங்க மண்டபத்தின் ஆரம்பத்தில் உலோகத்தால் உருவாக்கப்பட்ட சேவல் கொடியைக் காணலாம். சேவல் ஒன்று இக்கொடி மீது அமர்ந்து கூவி வருவது ஒரு வியப்பான அம்சமாகும். பாரவேல் மண்டபத்திலிருந்து முதல் பிரகாரத்திற்கு சென்றால் அங்கு பொன்தகடுகளால் அமைக்கப்பட்ட பொன்னாலான முருகனின் கருவறை அழகாக வரவேற்கிறது.



கருவறையில் தனக்கென ஒன்றுமில்லாமல் கோவண ஆண்டியாய் நின்ற கோலத்தில், அண்டிவரும் அடியாருக்கு, அருளும், அன்பும், அமைதியும், அரசபோகமும் அளிக்கவல்ல வள்ளல் அருள்பாலிக்கின்றார். வலதுகரத்தில் தண்டையூன்றி, இடது கரத்தை இடையில் வைத்து மேற்கு திசை நோக்கி, ஞான தண்டாயுதபாணியாக திவ்ய தரிசனம் தருகிறார். நவபாஷாணங்களால் (ஒன்பது நச்சுப்பொருள்கள்) போகர்சித்தர் அவர்களால் உருவாக்கப்பட்டவர். கருவறையினுள் ஒரு மரகதலிங்கமும் உளது. காலை 6 மணிக்கு விசுவரூபம், 8 மணிக்கு அலங்கார பூசை, காலசந்திப் பூசை, பள்ளியறை ஊஞ்சல் ஆட்டம் யாவும் நடைபெறுகிறது.

யோகர்சித்தர் சமாதி:
தண்டாயுதபாணி முருகன் ஆலயத்துக்கு இடது பக்கத்திலுள்ள ஒரு சிறு கோயில் போன்றது. இங்கு யோகர் பூசித்த புவனேஸ்வரி, மரகதலிங்கம், அணிந்த பாதக்குறடு ஆகியன காணலாம். 18 சித்தர்களில் அகத்தியருக்கு அடுத்ததாகப் போற்றப்பட்டும், சிறு வயதிலிருந்தே மிக ஞானசக்தியுடையவராக வியக்கப்பட்டவருமாவார்.

முருகனின் நெற்றியில் உருத்திராட்சம், அழகிய கோள்கள், கண், மூக்கு, வாய், யாவும் உளியால் செதுக்கப்பட்டவை போன்று அற்புதமாக தற்போதும் காட்சியளிப்பது அதிசயமாகும். ஒன்பது வருடங்களாக 4000 மூலிகைகள் கொண்டு 81 சித்தர்கள் உதவியோடு உருவாக்கினார். புலிப்பாணி சித்தர் போகருடைய பிரதம சீடராவார். மேலும் கருவூர் இடைக்காடர், சட்டைமுனி ஆகியோரும் சீடர்கள் ஆவர்.

பிரயாணம்
சுவாரஸ்யமானது. 16-01-2001 தை மாத முதற் செவ்வாய்க்கிழமை. செவ்வாய்க்கிழமை முருகனுக்கு உகந்த நாளாகும். மனைவியாரோடு, மதிய உணவின் பின்னர் மோட்டார் வாகன மூலம் பழனியை நோக்கிச் சென்றோம். பல மைல்களுக்கு அப்பாலே கூட்டம் கூட்டமாக, பந்தி பந்தியாக மக்கள் பழனியை நோக்கி கால்நடையாகச் சென்றுகொண்டிருந்தனர். மொட்டை அடித்தோர், குடும்பம் குடும்பமாகச்செல்வோர், காவடி மேளத்தோடு செல்வோர் யாவரையும் கண்டோம். அநேகர் மஞ்சள் நிற உடை அணிந்து சென்றனர். மற்றோர் எளிமையான உடை யோடு நடந்தனர்.



முதலில் கீழ்ப்பழனி எனும் திருவாவினன்குடி ஆலயத்தைத் தரிசித்தோம். பின்னர் படி வழியாக ஏறி, பல கோயில்களைத் தரிசித்து ஆறி, அமர்ந்து சென்றோம். ஆண்டியாகிய அப்பனைத் தண்டாயுதபாணி கோயிலில் காணவில்லை. சீரான உடை அணிந்து, மாலையோடு அருள்பாலித்துக் கொண்டிருந்தார். வெளிவீதி வரும்போது முருகன் தங்கரதத்தில் பவனி வந்தார். ஏகப்பட்ட கூட்டம் என்றாலும் முருகனை நன்றாகப் பார்க்க முடிந்தது. மக்கள் தங்க ரதத்தின் மீது காசை வீசி எறிந்தனர். "டங், டங்" எனும் ஓசை எழுந்தது. முருகனின் கொடை என எண்ணி மக்கள் அவற்றை எடுத்தனர்; நாமும் எடுத்தோம்.

18-01-2023 தைப்பூச நாளாகும்

"உனது பழனி மலையெனும்ஊரைச் சேவித் தறியேனே" - திருப்புகழ்.

இத்தினத்தில் சிவபெருமான் முருகனுக்கு காட்சி கொடுத்ததாகக் கருதப்படுகிறது. எள் போட்டால் எள் விழாது, அப்படியான கூட்டம். பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பரவச காவடி ஆட்டம். பெண்கள் காவடி இல்லாமலே ஆடினர். இடும்பன் மலை சென்று, பின்னர் நின்று, நின்றுதான் செல்ல முடிந்தது. காவடி கொண்டு சென்றோருக்கே முதலிடம். எம்மை நிற்க வைத்து, அவர்கள் சென்ற பின்னர் செல்ல வைத்தனர். பலமணி நேரத்துக்குப் பின்னர் ஒருவாறு ஆலயத்தை அடைந்தோம். இம்முறையும் தங்க ரத பவனியில் காசுவீச்சு நடைபெற்றது. எடுத்தோம். தற்போதும் எம்மிடம் இவை இருக்கின்றன.

அதே இரவில் சமீபத்திலுள்ள பிரகதீஸ்வரர், பெரியநாயகி அம்மன் ஆலயத்துக்குச் சென்றோம். அப்போதுதான் ஆண்டவனை தேரில் இருந்து இறக்கிக் கொண்டு சென்றனர். அதே சமயம் பூரண சந்திரனையும் காணக்கூடியதாகவிருந்தது. இக்காட்சி தற்போதும் எனது மனக்கண்ணில் ஒளி வீசுகிறது.

*08-08-2018* சனிக்கிழமை வண்டிச் சாரதி ஓரிடத்தில் எம்மைக் கொண்டு போய்ச் சேர்த்தார். அவ்விடத்தில் "கியூ"வில் சனங்கள் நின்றனர். நாமும் இணைந்தோம். (CABLE TRAIN) மின் இழுவை ரயில் மூலம் செல்வதற்காக ரூபாய் *50*க்கு சீட்டு எடுத்துச் சென்றோம். பழனி எப்படி முன்னேறிவிட்டது என வியந்தோம். குறுகிய நேரத்தில் தண்டாயுதபாணி ஆலயத்தை அடைந்தோம். ஒரு களைப்புமில்லை. சிறப்பு வழிச் சீட்டு எடுத்து, கால் கடுக்க நின்று ஒருவாறு அப்பனிடம் சென்றோம். ஒரு கணம்தான், என்ன பார்த்தோம் எனத் தெரியாது. பின்னர் போகர் சமாதியை ஆறுதலாகத் தரிசித்தோம். இங்கு கூட்டமே இல்லை. வெளியே சென்று பழனி மலையில் நின்று பலதடவை பழனியில் தோன்றும் மலை அடிவாரச் சூழ்நிலைகளைக் கண்டு, பின்னர் அந்த வண்டியில் திரும்பினோம். முன்பு தரிசித்த ஆனந்தம், அநுபவம் ஒன்றும் கிடைக்கவில்லை.

படிக்கின் றிலை  பழனித் திருநாமம் படிப்பவர்தான்
முடிக்கின்றிலை - திருப்புகழ்

நாரதர், சிவன், பார்வதி, மாம்பழக்கதை யாவரும் அறிந்ததே. மாம்பழம் முருகனுக்குக் கிடைக்காததால் கோபித்துக்கொண்டு பழனிமலைக்கு வந்தது தெரிந்ததே. தாய் பார்வதி மகனின் கோபத்தைத் தணிக்க "மகனே! பழம் நீ - ஞானப்பழம் நீ, உனக்கு ஏன் பழம்?" எனக்கூறினார். பழம் நீ - பழனி ஆகிவிட்டது. இதனாற்றான், "அஞ்ஞானத்தை அகற்றி, மெஞ்ஞானம் தரும் இடம் பழனி" என்று கூறினார் போலும். பழனி ஆதாரங்களில் மணிபூரகம் ஆகும்.

சிறப்பு:

பஞ்சாமிர்தம், தங்கத் தேர்வலம், காவடி ஆட்டங்கள், தைப்பூசம், பங்குனி உத்தரம், சூர சம்காரம், திருவிழாக்கள் ஆகும்.  செவ்வாய்க் கிரகத்துக்கு அதிபதியான முருகனை, பழனி முருகனை நான்கு வழிகளால் தற்போது சென்றடையலாம்.

1. படிப்பாதை - படிகள் மூலம் நடந்து அடைவது.
2. யானைப்பாதை - குறைவான படிகள் கொண்டது.
3. மின் இழுவை ரயில் - *8* நிமிடத்தில், *200* பேர் சென்றடையலாம்.
4. கம்பி ஊர்தி

பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன.  புகையிரதம் - சென்னை, திருச்சி, திண்டுக்கல், கோயம்புத்தூர், இராமேஸ்வரம் ஆகிய நிலையங்களில் இருந்து பழனி செல்கின்றன.
விமானம் - கோயம்புத்தூர் விமான நிலையம்.

வாரியார் அவர்கள் ஒரு சிறந்த முருக பக்தர். இவர் *1945* ஆம் ஆண்டு முதல் *10* வருடங்களாக ஒவ்வொரு மாதக் கார்த்திகைத் திருநாளன்றும் பழனி ஆலயத்தில் சொற்பொழிவு ஆற்றியவர். பல முருகன் பாடல்கள் பாடிய சௌந்தரராஜன் அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு தினத்தில் எவ்வளவு வேலைப்பழு இருந்தாலும் பழனி சென்ற முருகபக்தர்.

உள்ளம் உருகுதய்யா - முருகா
உன்னடி காண்கையிலே
அள்ளி அணைத்திடவே - எனக்கோர்
ஆசை பிறக்குதப்பா.

\- பிச்சி அம்மையார்.

# திருமுறையும் சிவயோகமும்

திரு.க.ஒப்பிலாமணி

சைவர்களாகிய நமக்கு நமது திருமுறைகள் பன்னிரண்டும், திருப்புகழ் அபிராமி அந்தாதி ஆகிய ஞான நூல்களும் ஞானத்தையும் முத்தியையும் தரக்கூடிய நூல்கள் ஆகும். நாம் இவ்வுலக வாழ்வில் பெறக்கூடிய செல்வ சுகம், பின் முத்திப்பேறு ஆகியவற்றைக் கிடைக்க உதவுபவை இவை. அதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. இந்த அருட்பாடல்களை நாம் உணர்ந்து ஓதவேண்டும். உலகில் உள்ள என்போன்ற அனைவரும் ஞானமும் முத்திப்பேறும் அடைய வேண்டும் என்று ஆவல் மனதில் தோன்றியதால் இதனை எழுதத் துணிந்தேன். மக்கள் உய்ந்து இறைவனடி சேரவேண்டும் என்பது எனது ஆசை.

நாம் எல்லோருக்கும் மேற்கூறிய திருமுறைகள் நன்றாகத் தெரியும். பாடவும் தெரியும். ஆனால் உணர்ந்து ஓதுகின்றோமா என்றால் அது கேள்விக்குறி. உணர்வுதான் இறைவனிடம் சேர்க்கும். உணர்வு வேண்டும் என்பதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள், திருவெம்பாவையில்,"சிவனே சிவனேயென்று ஓலம் இடினும் உணராய் உணராய் காண்" என்றார்.

மானுடராகப் பிறந்த இந்தப் பிறப்பைத் தவறவிட்டோமானால் பின்னர் என்னவருமோ ஏது வருமோ தெரியாது. அதைத்தான் தாயுமானவ சுவாமிகள், "இப்பிறப்புத் தப்பினால் என்னவருமோ! ஏதுவருமோ! யாம் அறியோம் பராபரமே!" என்றார். ஆறாவது அறிவாகிய மனதைக்கொண்டு அந்த இறைநிலையை அடைய வேண்டும் என்று யார் விரும்புகின்றோமோ அவர்கள் தான் இப்பிறப்பின் முதற்படியை எடுத்து வைக்கிறோம்.

இந்த உலகியல் வாழ்வுக்குச் செல்வம் கல்வி எல்லாம் கட்டாயம் தேவை. இவ்வுலக வாழ்வைக் கைவிடத் தேவையில்லை. உலக வாழ்வில் இருந்துகொண்டே இறைவனையும் ஒரு கையில் சிக்கெனப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

பொருள் தேடும்போதும் நல்லவழியில் தேட வேண்டும்; நீதி வழியில் தேடவேண்டும். அப்போதுதான் அது நிலைத்திருக்கும். அப்படியானவர்களைத்தான் இறைவனும் விரும்புவான். பஞ்சமா பாதகங்கள் செய்யக்கூடாது. ஏனெனில், அவை மீண்டும் பிறப்பைக் கொண்டுவந்துவிடும். எப்படிப்பட்ட பிறப்போ? யார் அறிவார் நல்லதையே செய்து நல்லதையே நினைத்து நல்ல வழியில் வாழப் பழகவேண்டும். அது ஆன்மிகத்திற்கு மிகவும் அவசியம்.

தமிழ் திருமுறைகளால் நாம் உய்யமுடியும். தமிழுக்கு உய்வைத் தரக்கூடிய அதிகாரம் முழுமையாக உண்டு.

திருநாவுக்கரசு சுவாமிகள், திருவாரூர்ப் பதிகத்தில்,

> பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்றால்
> ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
> தாம்படி மக்கலம் வேண்டுவ ரேல் தமிழ் மாலைகளால்
> நாம்படி மக்கலம் செய்து தொழுதும் மடநெஞ்சமே

என்றார்.

*திருமுறை 4, பதிகம் 102, பாடல் 3*

பொன்னால் சுவாமிக்கு அணி சாத்துகின்றீர், அன்றில் பூவால் மாலைகள் சாத்துகின்றீர்! எப்போதாவது ஆரூர் பெருமானிடம் இவை உங்களுக்கு விருப்பமா என்று கேட்டீர்களா?. அப்படிக்கேட்டால், எனக்கு நீங்கள் தமிழ்மாலைப் படிவம் சாத்தினால் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கும் என்று அவர் சொல்வார்” என்கிறார் அப்பர்.

அப்பர் அருளியதுபோல, தமிழ்ப் பாமாலை பாடுவதையே திருஞானசம்பந்தர்,

ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகண் மொழிதகையவே

என்கிறார்.

திருமுறை 3, பதிகம் 67 பாடல் 12

முத்தியும் ஞானமும் அடைய வழிகாட்டும் மொழி தமிழ்மொழி. அதில் நமக்குச் சந்தேகம் வேண்டாம். மொழிக்கு அந்தத் தகுதி உடையது என்று அருளாளர் உத்தரவாதம் அளிக்கின்றனர். அப்பர் சுவாமிகள், சம்பந்தர், சுந்தரர் தமிழ்பாடி எவ்வளவோ சாதித்ததும், இறையருளைத் தமிழால் பாடி எழுப்பிய வரலாறும் உண்டு. எனவே தமிழ் ஒரு தெய்வமொழி.

**மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்**
**முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்**
**ஏரி நிறந்தனைய செல்வன் கண்டாய்**
**இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்**
**ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்**
**அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்**
**வாரி மதகளிறே போல்வான் கண்டாய்**
**மறைக்காட் டுறையும் மணாளன் தானே**

**- அப்பர் (திரு:6, பதி:23, பா:5)**

**மைம்மலர்க் கோதை மார்பின ரென மலைமக ளவளொடு மருவின ரெனவும்**
**செம்மலர்ப் பிறையும் சிறையணி புனலும் சென்னிமே லுடையரெஞ் சென்னிமே லுறைவா**
**தம்மல ரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச் சொலும் வடசொலும் தாணிழற் சேர**
**அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிகள் அச்சிறு பாக்கம தாட்சி கொண் டாரே**

**- திருஞானசம்பந்தர் (திரு:1, பதி:77, பா:4)**

**சந்துசேனனு மிந்துசேனனும் தருமசேனனுங் கருமைசேர்**
**கந்துசேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா**
**மந்திபோற் றிரிந் தாரியத் தொடு செந்தமிழ்ப்பய னறிகிலா**
**அந்தகர்க்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே**

**- திருஞானசம்பந்தர் (திரு:3, பதி: 39, பா:4)**

# கடவுள் நம்பிக்கையும் சோதிடமும்

இறைவனிடத்தில் நம்பிக்கை உடையவன் சோதிடம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. நவக்கிரகங்களின் போக்கை முன்னாற் தெரிந்துகொண்டால் அவற்றால் நமக்கு வருகின்ற துன்பத்தைப் போக்கிக்கொள்ளக் கிரகசாந்தி செய்யலாம். அதனால் துன்பம் குறையாதா? என்று சிலர் நினைக்கிறார்கள். போலீஸ்காரனுக்குப் பயந்து அவனிடம் போய்ப் பேசுவதைக்காட்டிலும் போலீஸ்காரர்களை ஆட்டி வைக்கிற அதிகாரியிடத்தில் நட்பாக இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. கிரகங்களுக்குச் சாந்தி பண்ணுவதைவிடக் கிரகங்களுக்கு எல்லாம் தலைவனாக இருக்கின்ற பெருமானையே சரணாகதியாக அடைந்துவிட்டால் அந்தக் கிரகங்களால் நமக்கு என்ன தொல்லை விளையும்? இன்ன கிரகத்துக்கு இன்ன சாந்தி செய்யவேண்டும் என்பதை நூலில் இருந்து நன்கு அறிந்து நமக்கு யாராவது சொல்லவேண்டும். நூலில் நுட்பமாகச் சொல்லியிருக்கிறபடி நடந்தால் நமக்கு ஒருகால் கிரகத்தினால் விளையும் துன்பங்கள் குறையலாம். ஆனால் அவ்வளவு நுட்பமாக் கணித்துச் சொல்பவர்கள் மிகவும் அரியர். எல்லாவற்றுக்கும் பரிகாரமாக இறைவனுடைய துணை நமக்கு இருக்குமானால் எந்தக் கிரகம் எப்படி வந்தாலும் அதனால் விளையும் துன்பம் நமக்குக் குறைந்துவிடும்.

அருணகிரிநாதப் பெருமான் வினையாலும் அந்த வினையின் விளைவைத் தருவனவாகிய நாளினாலும் கோளினாலும் வருகின்ற துன்பங்களுக்கு நல்ல பரிகாரம் சொல்கிறார். முருகனுடைய திருவருள் இருந்தால் அவற்றால் அச்சம் கொள்ளவேண்டாம் என்று உறுதி கூறுகிறார்.

நாளென் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே

நன்றி கி வா ஜகந்நாதன் "கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்"



# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com




உ

# சிவயோகம்
# SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்
## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்...**

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function





**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**


SKP
SRI KANTH PROPERTIES
Commercial & Residential
Estate Agents
What we do...
COMMERCIAL & RESIDENTIAL
SALES | LETTINGS
PROPERTY MANAGEMENT
Zoopla
PrimeLocation.com
ClientMoney Protect
PRS Property Redress Scheme
DPS
Contact Us for FREE VALUATIONS
557A High Road Wembley Middlesex HA0 2DW
0203 813 9888 | 07960 124822
info@srikanthproperties.co.uk www.srikanthproperties.co.uk

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஒக்டோபர் (22-10-2023) தொடக்கம் ஜனவரி (15-01-2024) வரை

| | | |
|---|---|---|
| *22.10.2023* | ஞாயிறு | சரஸ்வதி பூசை |
| *23.10.2023* | திங்கள் | விஜயதசமி |
| *26.10.2023* | வியாழன் | பிரதோஷம் |
| *10.11.2023* | வெள்ளி | பிரதோஷம் |
| *12.11.2023* | ஞாயிறு | கௌரி விரதம், தீபாவளி |
| *13.11.2023* | திங்கள் | கந்தசஷ்டி ஆரம்பம் |
| *18.11.2023* | சனி | சூரசங்காரம் |
| *19.11.2023* | ஞாயிறு | திருக்கல்யாணம் |
| *24.11.2023* | வெள்ளி | பிரதோஷம் |
| *26.11.2023* | ஞாயிறு | திருக்கார்த்திகை |
| *27.11.2023* | திங்கள் | விநாயகர் விரதம் |
| *10.12.2023* | ஞாயிறு | பிரதோஷம் |
| *18.12.2023* | திங்கள் | திருவெம்பாவை ஆரம்பம், கொடியேற்றம் |
| *24.12.2023* | ஞாயிறு | பிரதோஷம் |
| *26.12.2023* | செவ்வாய் | தேருற்சவம் |
| *27.12.2023* | புதன் | நடேசர் அபிஷேகம் |
| *09.01.2024* | செவ்வாய் | பிரதோஷம் |
| *15.01.2024* | திங்கள் | தைப்பொங்கல் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை
மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732    Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com    smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 | |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |
| Post code | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |
| President | | Hon. General Secretary | | Membership Secretary | |

# Holistic Approach to heal the Mental and Physical ailments

S. Selvabaskaran

Human beings are the only creations being endowed with the unique weapon of mind. Whoever is able to master it, will be victorious in life. A slave of the mind cannot achieve happiness or peace. It is the cause of all the worldly activities and experiences of the mind. A body without the mind is like a school without the teacher; a temple without the deity; or an electric wire without current. The mind is the cause of man's bondage or liberation. If man can fill himself with good thoughts in any situation, his life will become sanctified. Hence it is necessary for everyone to cultivate good thoughts and make them govern his life and actions.
"The mind wills, yearns, prompts and insists on effort and action".- Baba
The process is named SANKALPA.

How to be healthy mentally? This is the big question. It is our own thought process, the good and the bad, called as good sankalpas and bad sankalpas which can lead to either happiness or peace of mind or to misery and depression.

Good Sankalpas are based on truth, love, charity and compassion. Bad Sankalpas are based on greed, anger, lust and deceit. A sankalpa affects the consciousness subtler than an electric current.

Quality of Environment:

Stress is the "wear and tear" of our bodies experience as we adjust to our continuously changing environment; it has physical and emotional effects on us and can create positive or negative feelings. As a positive influence, stress compels us to action; it can result in a new awareness and an exciting new perspective. As a negative influence, it can result in feelings of distrust, rejection, anger, and depression, which can lead to health problems such as headaches, upset stomach, rashes, insomnia, ulcers, high blood pressure, heart disease, and stroke.

Middle age life stress includes:

- Fear of loss of old age
- Fear of loss of femininity and attractiveness
- "The empty nest syndrome" (children leaving home, or loss of a partner due to Death or separation)
- Retirement and loss of position and context:
- Financial problems; Our ambitions which have remained unfulfilled;
- Physical disability and illness of self, partner or parents.

The mean age group of affected individuals falls between 35-40 years; however, depending on the temperament of that person it may affect any age group.

Stress in Younger age group:

The younger age group is also faced with various problems such as high expectations of parents on them to perform well in their academic activities, long hours of study with no recreation, i.e, relaxation of the mind, too much competition in schools and unhealthy rivalry in vying for more marls- not by better performance but trying ways and means of how to put the other one down. All their energy is wasted in negative thinking. Then comes the phase of giving in to temptations, bribe, drugs, alcohol and other vices getting one deeper into the puddle of misery, but then, at last, it is too late!

The Psychological Symptoms include:

- Depression, fluctuation of mood and crying for no reason;
- Irritability, short tempers and aggressiveness;
- Anxiety, nervousness and tension;
- Inability to concentrate, forgetfulness and poor memory;
- Loss of confidence and the ability to take decisions;
- Loss of energy, libido and tiredness.

Looking at the whole thing from a Spiritual Angle:

The person who is spiritually activated and well-motivated will be able to cope with this situation perfectly while the person who desires have no end and who is emotionally high strung and not at peace with her/himself will end up in disastrous consequences.

The spiritual upliftment cannot be started at the end point, rather, an inclination towards this path should be there within the person from the very beginning and should only be a conversion from a part time involvement to a full-time involvement; that is all.

There is a close relation between the neural and the humeral control systems in the body. These two systems do not work in an isolated way. The coordinated action is achieved through the hypothalamus which receives neural connections from different parts of the brain. It also receives chemical signals regarding various parameters through the chemo-receptors.

While following the spiritual path, both the systems are influenced. If the internal environment of the body is free from stress syndrome, the impact of anger, hatred, jealousy, envy and lust will automatically vanish and this will make a person spiritually high, having the qualities of compassion, nishkama seva and love to all.

If a person is spiritually high he/she will be recognised by the qualities possessed by his/her peaceful state of mind viz. calmness, tranquillity, contentment and power of self-control. His/her love to all is due to her vision of God in all, devotion, sweet and sympathetic voice,

shining eyes with lustre and brightness on the face, freedom from fear and worry. At this stage, the thoughts, actions and deeds of the individual are in harmony and at par with will, wisdom and activity.

If the spiritually high individual has developed pain receptors within her/himself, she/he will forget the ill behaviour meted out to her/him.

Our physical body and our minds!

A healthy body is energetic, productive, getting on the path to maintain a healthy body is not difficult for challenging provided a heathy lifestyle is maintained right from the beginning. The following criteria have a direct impact on our physical health problems significantly increase of the rise in developing mental health and well - being and vice versa. What are the criteria which have a direct impact on the health.

1. Nutrition- Are we eating the right foods?
2. Physical activity
3. Emotional stability

Good sankalpas(thoughts) can elicit the best out of a person and help him to use all his strength for his uplift. One has to recognise bad sankalpas or urges as soon as they arise and render them ineffective by the systematic cultivation of beneficial sankalpas. These alone can save a person from disaster and keep him close to Prashanthi, the Supreme Calm.

Supreme Calm through Yoga

One of the ways to attain this Supreme Calm can be through “Yoga”. There are four main streams of yoga which utilise the four main facilities in maintaining intellect, emotion, will power and the executive capacities through the sensory and motor apparatus.

| | |
|---|---|
| The path of wisdom: | GNANA YOGA |
| The path of eternal bliss: | BHAKTI YOGA |
| Harnessing the “will”: | RAJA YOGA |
| Ordinate by action: | KARMA YOGA |
| Inner outburst of pure love for God: | JAPA YOGA |

Lastly is SAMARPAN,i.e., Self-surrender

In the Bhagavad Gita, Lord Krishna says, “Oh! Arjuna, four types of virtuous men worship me- the seeker of worldly objects, the sufferer, the seeker of knowledge, and the man of wisdom”. “Of these, the best is the man of wisdom, ever established in identity with Me and possessed of exclusive devotion, for I am extremely dear to the wise man (who knows Me in reality) and he is extremely dear to Me”. “Abandoning all duties, take refuge in Me alone, I will liberate thee from all sins, grieve not”.

Karma Yoga is a Sanskrit word which comes from the root “Kri” meaning action. The whole universe is bound by action. When the mind thinks it is doing the work it expects the reward and is disappointed when it isn’t rewarded, but when you do karmas thinking God is the

doer; there is no tension. You are a mere instrument in the hands of the Almighty. So, it actually the “I” which is responsible for the tension.

Health and Environment

Quality environment and nature are major determinants of physical and mental ailments, yet preventive health rarely receives high priority. The above trend can be changed by ensuring that everyone has access to the environmental and financial resources needed to lead a healthy state of complete physical , mental and social wellbeing and not merely the absence of disease or infirmity, not only to minimise health risks but by ensuring personal and community Fulfilment, self-esteem and security ensured to fulfil their rights under the Universal Declaration of Human Rights need to comply a sustainable level of resources, ensuring a balance between economic growth, environmental care and social wellbeing.

Rejuvenation and Longevity of Life

“Mrityun-Jaya” victory over death. St Thirumoolar in his Thirumanthiram says to attain the highest spiritual state insists rejuvenation and longevity of life through Yoga are intended for humans looking for good of the society and for his/her own salvation!

# பிழைப்பதற்காக மேடை ஏறாதீர்கள்!

ஹரிகதை சொல்பவர்கள் எல்லாருமே வாரியார் சுவாமிகள் அல்லர். இந்துமத விளக்கம் கூறுபவர்கள் எல்லாருமே சுவாமி சின்மயானந்தர்கள் அல்லர். ஆனால் இவர்களைப்போல் புகழ் பெறவேண்டும் என்ற வேகத்தில் இவர்களுக்குக் கூடும் கூட்டத்தைப்போல் தம் உரைகளைக் கேட்கவும் கூட்டம் கூடவேண்டும் என்ற தவிப்பில் பேச்சாளர் சிலர் சில மலிவான உத்திகளைக் கையாளுகின்றார்கள். அதாவது மக்களைச் சிரிக்க வைக்கவேண்டும் என்பதற்காகவும், கைதட்டல் பெறவேண்டும் என்பதற்காகவும் நம் தெய்வங்களுக்கும் அவதார புருஷர்களுக்கும் லௌகிக சாயல் அளித்து, கொச்சையாக “கொமெடி” செய்கிறார்கள். இரண்டு பெண்டாட்டிச் சண்டை, தலையணை மந்திரம் என்றிப்படிக் கற்பனைகளைச் சோடித்து விரசமாகக் கதை சொல்லுகின்றார்கள்.

ஐயா! இந்து மதத்தைப்பற்றி, வேதங்களைப் பற்றி, உபநிஷத்துகளைப் பற்றி, தேவாரத்தைப் பற்றி, திருவாசகத்தைப் பற்றி, புராணங்களைப் பற்றிச் சரிவரத் தெரிந்தால் மட்டுமே,

விளக்கங் கூற மேடை ஏறுங்கள்!
பிழைப்பதற்காக மேடை ஏறாதீர்கள்!
இப்போதைக்கு இது பணிவான வேண்டுகோள்!

**மணியன் - ஞானபூமி, பெப்ரவரி *1984***



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## ஆள்வினையுடைமை
Manly Effort

**அதிகாரம்:** 62 **குறள்:** 611

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்".

பொருள்:

அரியது என்று நினைத்து, எந்தவொரு செயலையும் செயற்படுத்துவதற்கு அச்சம் அடைவது கூடாது. முயற்சி செய்வதே பெருமையானது.

Meaning:

Yield not to the feebleness which says, "This is too difficult to be done." Labour will give the greatness (of mind) which is necessary (to do it)

துர்வாசர் என்ற மாமுனிவர், அத்திரி முனிவருக்கும் அனுசூயாவுக்கும் மகனாகப் பிறந்தவர். அவருடைய முன்கோபம் மிகவும் பிரசித்தமானது. மற்றைய முனிவர்களைப் போலல்லாது அவர் சாபமிடும் போதெல்லாம் அவருடைய தவவலிமை அதிகரிக்கும். அவருடைய சாபங்களால் பாதிப்படைந்தவர்கள் பலர்.

இதன் காரணமாக, துர்வாசர் எங்கே சென்றாலும், மிகுந்த பயம் கலந்த மதிப்புடன் நடத்தப்பட்டார். ஒருமுறை, துர்வாசர் துவாரகை நாட்டுக்கு ஒரு அறிவித்தல் அனுப்பினார். ஆறு மாதங்கள் கழித்து, தான் அங்கே விருந்துண்ண வரவிருப்பதாக அந்தச் செய்தி தெரிவித்தது. அவருக்கான விருந்துணவைச் சமைப்பதற்கு அரண்மனைச் சமையல்காரர் மறுத்துவிட்டார். யார் யாரிடமோ எல்லாம் கேட்டுப்பார்த்தும் யாரும் சமைக்க முன்வரவில்லை. துர்வாசருடைய கோபத்துக்கும் சாபத்துக்கும் அவர்கள் பயந்ததே இதன் காரணம். தங்களால் நாட்டுக்கும் ஏதும் சாபம் வந்துவிடுமோ என்றும் அவர்கள் பயந்தார்கள்.

கடைசியில், ஒரு ஏழைச் சமையல்காரர் முன்வந்து, துர்வாசர் வரும்போது தானே அவருக்கான சமையலைச் செய்வதாக ஒப்புக்கொண்டார்.

விருந்துக்கான நாள் வந்தது. துர்வாச முனிவரும் வந்து உணவு உண்டார். மிகவும் ரசித்துச் சாப்பிட்டவர், சமையல் செய்தவரைக் கூப்பிட்டும் பாராட்டினார்.
"என் வயிறு எப்படிக் குளிர்ந்ததோ, அதுபோல இந்த நாடும் குளிர வேண்டும்" என்றும் வாழ்த்தினார். அனைவரும் மகிழ்ந்தார்கள்.

அவர் விடைபெற்றுப் போனபின், எல்லோரும் அந்தச் சமையல் செய்தவரிடம், "சாதாரண உணவுதானே செய்தாய்? முனிவர் அதை எப்படி விரும்பிச் சாப்பிட்டார்?" என்று கேட்டார்கள்.

சமையல் செய்தவரின் பதில்:

"ஆறு மாதங்களின் பிற்பாடுதான் முனிவர் வர இருந்தபடியால், நான் அவருடைய சொந்த ஊருக்குப் போய், முனிவருடைய தாயாரைச் சந்தித்து, முனிவருக்குப் பிடித்த உணவு என்ன, அதை அவர் எப்படிச் சமைப்பார் என்ற கைப்பக்குவத்தை அறிந்து கற்றுவந்து, அது போலப் பயிற்சி செய்து சமைத்தேன்".
கேட்டவர்கள் சமையற்காரரின் புத்தியை வியந்து நின்றார்கள்

Sage Thurvasar was the son of sage Athiri and Anusooya. He, by nature, was a hot tempered person and became well known for that.

Whenever he imposed spell on others, not like the other sages, his power of penance (தவ வலிமை) became increased. So many people got affected by his spells. Because of this, wherever he went, Thuruvasar had been treated with high respect out of fear.

Once, he sent a message to Dwarakai, saying, he would be visiting that Country in six months time and he would like to have a feast. The chef of the palace refused to cook for Thurvasar out of fear. Many other cooks were asked for the same and nobody was willing to cook for Thurvasar. Finally, one poor cook agreed to cook food for Thurvasar.

The day came, when the sage arrived at Dwarakai for his feast. He was honoured and his feast was offered. Thurvasar enjoyed the food, summoned the chef who cooked the food, telling the cook that he appreciated the food and praised him. He added,

> 'May this country be filled with joy and prosperity in the same way that you have filled my stomach with delicious food'

All the people were very happy and felt relieved.

After Thurvasar left the place, everyone came to the poor cook and asked him,

'How did you manage to please him by just cooking an ordinary menu? How was it possible for the sage to enjoy the food, eat well and appreciate you?'

The poor cook replied:
'I had six months to prepare my self before cooking for the sage. I used that time to visit his place. There, I met his mother and found out from her what kind of food the sage liked and how it should be prepared. I learned her recipies and then practised them.'

On hearing this answer, they praised the cook's cleverness.



# அருணகிரிநாதர் அருளிய

# திருப்புகழ் 1370-1450

திரு க செல்வரத்தினம்

'உலகம்' சிறந்த படைப்பு என்பதைக் கண்ட புலவர்கள், 'உலகம்' என்னும் சொல்லை முதலில் வைத்துப் பாடினார்கள். இற்றைக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் நக்கீர தேவநாயனார் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என்று ஆரம்பிக்கிறார். அதேபோன்று கம்பரும் சேக்கிழார் பெருமானும் தமது நூல்களில் 'உலகம்' என்றே ஆரம்பித்தனர்.

அருணகிரிநாதர் தமிழ்நாட்டில், 15ஆம் நூற்றாண்டில், திருவண்ணாமலையில் பிறந்தார். சிறு பராயத்தில் பெற்றோரை இழந்ததனால் தமக்கையாரின் அரவணைப்பில் வளர்ந்தார். உரிய காலத்தில் திருமணமும் நடந்தது. தீய பழக்கத்தில் ஈர்க்கப்பட்டார். பெருநோயால் அவதிப்பட, கட்டிய மனைவியும் கைவிட, மனத்தாங்கலால் திருவண்ணாமலைக் கோபுரமேறிக் குதிக்கும் மனத்தவராய் எண்ணும்போது முதியவர் ஒருவர் குன்று தோறும் குமரக் கடவுள் பற்றி விளக்கி சரவணபவ பற்றிய தத்துவத்தையும் பற்றி விளக்கி அகன்றார்.

எனினும் அருணகிரியார் ஒரு முடிவுக்கு வந்து கோபுரத்தில் ஏறி, முருகா என்றோதிக் குதித்தார். எனினும் ஜன்மாந்திர நல்வினை தொடர்பு காரணமாக, வடிவேலன் திருக்கரத்தால் காத்தருளி, மனித குல நலத்துக்காக "முத்தைத்தரு பத்தித் திருநகை" என முதல் அடி எடுத்துக் கொடுத்தார். அத்தோடு, "சும்மா இரு" என்று உபதேசமும் கூறி மறைந்தார். இறை அருளால் அதிசயம் கைகூட திருப்புகழ் பல வடிவங்களில் அவர் வாயில் இருந்து உதிர்ந்தன. திருப்புகழ் படைப்பு முருகப் பெருமானது ஆறெழுத்து மகா மந்திரமான "சரவணபவ" என்பதுடன் தொடர்பு படுத்திப் பேசப்பட்டது.

அவரது திருப்பாடல்கள் படைப்புக்கள் பின்வருமாறு அமைந்தன:

1 திருப்புகழ் 1311 பாடல்
2 திருவகுப்புக்கள் 25
3 கந்தர் அலங்காரம் 108
4 கந்தர் அநுபூதி 52
5 கந்தர் அந்தாதி 107
6 விருத்தங்கள். (வேல் விருத்தம் 10, மயில் விருத்தம் 11, சேவல் விருத்தம் 11

திருப்புகழ் தேவாரத்துக்கு இணையாகவும், கந்தர் அலங்காரம் திருவாசகத்துக்கு இணை யாகவும், கந்தர்அநுபூதி திருமந்திரத்துக்கு இணையாகவும் முருக பக்தர்களால் போற்றப்படுகின்றன.

அருணகிரியார் சைவத்துக்கும் சமுகத்துக்கும் ஆற்றிய தொண்டுகள்:

கீழேயுள்ள பாடலில் மயில், கடப்ப மாலை, சேவல், வடிவேல், திருவடி தீட்சை, பன்னிரு தோள், வயலூர் பற்றியும் முருகனே அடிகள் எடுத்துக் கொடுத்து அவற்றைப் பாடும்படி பணித்ததாக அரணகிரியார் கூறுகிறார். எழுதப்போகும் அனைத்துப் பாடல்களும் உலக நன்மைக்காக திருப்புகழ் என அழைக்கப்படுமென முருகப் பெருமானே பெயர் சூட்டியதாகவும் கூறியுள்ளார்.

பாடலின் முதற்பாதிப் பகுதி முருகப் பெருமானால் அருணகிரியாருக்கு கூறப்பட்டது.

பக்கரை விசித்ரமணி பொற்கலணை யிட்ட நடை
பட்சியெனும் உக்ரதுர - கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை - வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியபன் - னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பனென னக்கருள்கை - மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வல்துவரை - யிளநீர் வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை - தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் - அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய - பெருமாளே!

சிவபெருமான் முகம் ஐந்து முருகப் பெருமான் முகம் ஆறா?

தேவர்கள் குறைநீக்க, சிவபெருமானது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்பொறி ஆறுமுகப் பெருமானை உருவாக்க முடியுமானால் அவ்வாற்றல் அவரிடம் இருக்கிறதென்று புலனாகின்றது. முருகப் பெருமான் பிறவான் இறவான் என அருணகிரியாரே பதிவு செய்துள்ளார்.

“அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தை வைப்பது எந்நாளோ?” - தாயுமானவர்

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே - கந்தர் அநுபூதி

தில்லை சிவாசாரியார்கள் கட்டுப்பாட்டில் கோயில் வரக் காரணமாய் இருந்தது திருப்புகழ்.

தாது மாமலர் எனத் தொடங்கும் திருப்புகழ் பாடல்,

வேத நூன்முறை வழுவாமே தினம்
வேள்வியா லெழில் புனைமூ வாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை - புரிகோவே
வீறு சேர்வரை யரசாய் மேவிய
மேரு மால்வரை என நீள்கோபுர
மேலை வாயிலின் மயில் மீது ஏறிய - பெருமாளே

3000 தீட்சிதர்கள் தினமும் அபிடேகம் செய்து வழிபாடு பூசை செய்வர் என்ற திருப்புகழ்ப் பாடலைச் சுட்டிக்காட்டி விளங்கப் படுத்தினர். இப் பாடல் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருண கிரிநாதர் பாடிய பாடல் என விளக்கம் கொடுக்கப்பட்டபடியால் கோயில் சோழப் பெருமன்னர்களால் கட்டப் பட்டிருப்பினும் 400 வருடங்களாக தீட்சதர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபடியால் அவர்களின் நிர்வாகத்தை கோடு ஏற்றுக் கொண்டது.

ஏட்டில் இருந்த திருப்புகழ் எவ்வாறு அச்சேறியது:

ஆங்கிலேய சாம்ராய்ச்சியம் திகழ்ந்துவந்த காலத்தில் வடக்குப்பட்டு தமிழ் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழில் ஈடுபாடு கொண்டவராக விளங்கியவர். சங்க கால நூல்களைத் தேடிய தமிழ்த் தங்கத் தாத்தா டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் போன்று இவரும் திருப்புகழ் பாடல்களைச் சேகரித்து வந்து பெருந் தொண்டாற்றினார். இவர் வீடுகள் தோறும் சென்று திருப்புகழ் பாடல்களைச் சேகரித்து 1894 இல் முதற் பதிப்பை வெளியிட்டார். அவர் இறையடி அடைந்தபின் அவரது மகன் செங்கல்வராய பிள்ளை 1901ம் ஆண்டு இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். 1964 இல் அருணகிரிநாதர் படமும் திரையிடப்பட்டது. நன்றி மறவாத தமிழ்மக்கள் சுப்பிரமணிய பிள்ளை அவர்களை கௌரவிக்க, திருத்தணிக்கோயில் மலைப் பின் பக்கத்தில் அவரது சமாதி அமைத்துள்ளனர்.

அருணகிரியார் செய்த சைவ சமயத் தொண்டு:

இவர் வாழ்ந்த காலத்தில் அறு வகைச் சமயங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்பன அவை. மத ஒற்றுமையை வலியுறுத்தி அருணகிரியார் பாடல்கள் பாடினார். இவர் காலத்தில் சைவ வைணவ முரண்பாடுகள் உச்சக் கட்டத்தில் இருந்த வேளை சமயங்களின் சமரசத்தை நோக்கி இவரது வாயில் இருந்து பாடல்கள் ஆற்றொழுக்காய் உதிர்ந்தன.

வல்லினத்தை மெல்லினத்தை தனித்தனியாக வைத்து திறம்பட பாடல்களில் பாடிச்சாதித்துள்ளார். தமிழ் உச்சரிப்புக்களை சரியாக உச்சரிக்கக் கற்றுக் கொடுக்கும் பெரும் ஆசானாக விளங்கினார். நமசிவய என ஓதினால் இகபர சுகம் கிடைக்கும் சிவாயநம என ஓதினால் சிவகதி கிடைக்கும் பழனிமலை சரவணபவ என்றோதினால் இரண்டும் கிடைக்கும் என்பர்.
பழநி:

வசனமிக வேற்றிமறவாதே மனது துயராற்றி லுழலாதே
இசைபயில் சடாட்ச ரமதாலே இகபரசௌ பாக்கியம் அருள்வாயே
பசுபதி சிவாக்கியம் உணர்வோனே பழநிமலை வீற்றருளும் வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ அமரர்சிறை மீட்ட பெருமாளே.

அருணகிரிநாதர் வில்லிபுத்தூரருடன் முரண்பாடு (சைவ வைணவம் பற்றியது)

வைணவ பக்தரான வில்லிபுத்தூர் ஆழ்வார் சக்திஅருள் பெற்ற திறமையானவர். பெருஞ்சித்திரனார் எழுதிய மாபாரதம் கிடைக்காத படியால் இவரே தமிழில் தற்கால மாபாரதம் எழுதிய பெருந்தகை. எனினும் ஆற்றலுடன் செருக்கும் நிறைய அவரிடம் இருந்தது. ஒரு தடவை பல்லக்கில் குறுநில மன்னர் போல வரும் வழியில், முருக அடியார்கள் அருணகிரிநாதரின் "திருமகள் உலாவு மிரு புயமு ராரி திருமருக நாமப் பெருமாள் காண்" என்ற கதிர்காமத் தலத் திருப்புகழைப் பாடி வந்தனர். இதைக்கண்டு பொறுக்காத புலவர் அருணகிரியாரை மட்டந்தட்ட

எண்ணி அடுத்த நாள் பிரபுடதேவர் அரசர் தலைமையில் போட்டி ஒன்றை வேண்டினார். தோற்பவரது காதை வெற்றிபெற்றவர் வெட்டுவது போட்டி நிபந்தனை. வழமையாக வாகை சூடும் வில்லிபுத்தூர் அதையே எதிர்பார்த்தார். போட்டி தொடங்கியது. சான்றோர் முன்னிலையில் அருணகிரியார் முதலில் பாட, அதை எதிர் கொள்ள முடியாத பெரும் புலவர், தோற்றதை இறுதியில் ஒப்புக் கொண்டார். அருணகிரியார் போட்டி நிபந்தனைப்படி வில்லிபுத்தூரரது காதை வெட்டாது மன்னித்து காது அறுக்கும் குறட்டையும் வீசி எறிந்தார். தோற்ற வில்லிபுத்தூர் ஆழ்வார் வெட்கத்தினால் பல்லக்குத் திரையை மூடிப் பின்வாங்கினார். கருணைக்கு அருணகிரி என்றும் வாக்கிற்கு அருணகிரி என்றும் இதனால் புகழப் படுகிறார்.

திருப்புகழ் பாடுவதால் நன்மைகள் பலவுண்டு. எந்த நோய் வந்தாலும் "இருமலு ரோகமுயுலகன் வாத விடமேநீ..... எனும் பாடல் பாட அது நோய் நொடிகளைத் தீர்க்கும். இதுபோல, "நீலங் கொள் மேகத்தின் மயில் மீதே...." எனும் பாடல் திருமணம் நிறைவேறவும், வேறு பல திருப்புகழ் பாடல்கள், யமபயம் போக்க, வறுமை நீங்க, வேண்டிய பேறுகள் பெற, பூவுலகில் புகழுடன் வாழ, பிறப்பில்லா பேரின்பம் பெற என உள்ளன. கோயில்களில் பஞ்ச புராணம் என்றதும் புராணப் பாடலுடன் திருப்புகழ் பாடலும் இப்போது பாடப் படுகின்றது. இந்த நிகழ்வு திருப்புகழின் மகிமையைக் காட்டுகின்றது

.

பிரணவத்தின் பொருள்:

இறைவன் உமையம்மைக்கு விளக்கிய பிரணவ மந்திரப் பொருள் கந்தபுராணத்தில் இல்லை. ஆனால் அருணகிரியாரால் காட்டப்படுகிறது.

மழலை மொழி கொடு தெளிதர ஒளி திகழ்
அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே!

கிருபானந்த வாரியாரை அடையாளம் காட்டியவர் யார்?

மதுரை திருப்புகழ் சாமி ஐயர் ( இயற் பெயர் உலகநாதர்) முருகப் பெருமானில் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர். ஒரு நாள் அவரது தூக்கத்தில் அருணகிரிநாதர் தான் செய்த பிழைகள் காரணமாக கோபுர உச்சிமீது ஏறித் தற்கொலை செய்யக் குதித்தபோது முருகப்பெருமான் அவரைப் பூப்போலக் கையில் தாங்கிக் காப்பாற்றியதென்று கனவு கண்டார். அதைத் தொடர்ந்து அருணகிரியாரில் பற்றுக் கொண்டு திருப்புகழ் சபை ஒன்றை 1919ல் மதுரையில் நிறுவினார். தத்துவப் பிரசங்கங்கள் நடத்திவந்தார் இதனால் மக்கள் ஆதரவு அவருக்குப் பெருகியது. தவறாது கிரமமாக தத்துவ விளக்கத்தைத் திருப்புகழ் சபை உறுப்பினர்களிடம் சேர்ப்பதிலும் காலத்தைப் போக்கினார். அன்றொருநாள் அடியார் ஒருவர் மேடையருகே வந்து திருப்புகழ்சாமி ஐயர் காலில் வீழ்ந்து வணங்கினார். அவர் காங்கேய நல்லூரில் பிறந்த மல்லையா பாகவதர் எனும் இசைஞானி. திருப்புகழ் பாடுவதிலும் முருகன் வழிபாட்டிலும் காலத்தைக் கழித்து வந்தார் சாதாரண குடும்பத்தைச சேர்ந்த இவருக்குப் பதினொரு பிள்ளைகள். இரண்டாவது மகன் கிருபானந்த வாரியார் ஆவார். தாம் ஒரு முருகபக்தன் என்றும் ஊரில் முருகன் கோயில் கட்டுவதாகவும் பணம் போதாமையால் தொடர்ந்து கட்டுமானத்தை தொடரமுடியாமல் போய்விட்டதென மல்லையா பாகவதர் மதுரை திருப்புகழ் சாமியாரிடம் கூறினார். உடனே திரு நீற்றுப் பொட்டலமும் ஒரு ருபாய் குத்தியும் கொடுத்து, செட்டிநாட்டுப் பக்கம் போனால் அங்கு உதவி கிடைக்குமென வாழ்த்துக் கூறி அனுப்பிவைத்தார். அதன்படி பாகவதர் குடும்பம் கோயில் கோபுரக் கட்டுப்பணி செய்யும் பொழுது, கொத்தனாருக்குச் சிற்றுண்டி கொடுத்து இறங்குகையில் அவரது மகனார் சறுக்கிக் கீழே வீழ்ந்து மயங்கிக் கிடந்தார் திருப்புகழ்

சாமியார் கொடுத்த திருநீற்றைத் தந்தையார் மயங்கிக் கிடந்த மகன் மீது பூசியதும், மகன் விழித்துக் கொண்டார். இதனால் வாரியார் குடும்பம் திருப்புகழ் சாமியார் மீது மேலும் மதிப்பு வைத்தது. இறுதியில் கோயில் திருப்பணி யாவும் நிறைவேறின. இன்னுமொரு முறை, தத்துவப் பிரசங்கம் செய்யும்போது வயிற்றுப் பிரசினை காரணமாகத் தொடர்ந்து பேச முடியாத படியால் தமக்குப் பதிலாக மல்லையா பாகவதரைப் பேசும்படி வேண்ட, தன்னுடன் வந்த 25 வயது மதிக்கத்தக்க தனது இளைய மகன் கிருபானந்த வாரியாரைப் பேச அநுமதி பெற்றார். அந்தக் கன்னிச் சொற்பொழிவை ஒன்றரை மணித்தியாலம் மடை திறந்த வெள்ளம் போலக் கிருபானந்த வாரியார் பேசி அசத்திவிட்டார்.

இதைத் தொடர்ந்து திருப்புகழ் சாமிஜயர் தாம் போகும் கூட்டங்களுக்கு வாரியாரை அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வாரி என்பது மழை அல்லது வெள்ளம் எனப்பொருள்படும் திருப்புகழ் சாமிஜயர் தான் இன்று கிருபானந்த வாரியாரின் பிரசங்க மழையை தமிழ் உலகம் பயன் பெறக் காரணமானவர் என்று கூறினால் மிகையாகாது. வாரியார் என்றால் கிருபானந்த வாரியாரையே குறிக்கும்.

முருகப் பெருமானும் சிவபெருமானும் ஒருவரே!
தேவர்களின் துன்பத்தைப் போக்க எம்பெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து புறப்பட்ட ஆறு பொறிகளே ஆறு முகப்பெருமானை உருவாக்கின. வேண்டியபோது அடியார்களுக்கு உதவ கீழ் நோக்கிய அதோ முகம் என்ற ஆறாவது முகத்தை எம்பெருமான் கொண்டுள்ளார். இந்த முகத்தில் மட்டும் தான் இறைவனது கண்டம் நீல நிறமாக உள்ளது.

தாயுமானவர், “ஐயா அருணகிரி அப்பா உனைப்போல மெய் ஆக ஓர் சொல் விளம்பினர் யார்?” என்று ஆற்றுப் படுத்துகிறார்.

சிதம்பர சுவாமிகள், “முருகா என உனை ஓதுவோர் மூவுலகில், அருகாத செல்வம் அடைவர் சமராபுரிப் புண்ணியனே” என்கிறார்.

பாம்பன் சுவாமிகள், “வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை” என்கிறார்.

குமரகுருபர சுவாமிகள் எழுதிய கலிவெண்பா குட்டிக் கந்தபுராணம் எனப் போற்றப்படுகிறது.

அடுப்பில்லாத வீடு இருந்தாலும் இருக்கலாம், முருகப் பெருமான் பற்றிய திருப்புகழ் இல்லாத வீடு இருக்கக் கூடாது என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. கீர்த்தனைகள் பாடுதல் இறைவனை அடைய ஒரு வழி. அன்பு உள்ளத்துடன் திருப்புகழை பிழையற உச்சரித்துப் பாடி முருகப் பெருமானின் அருளைப் பெறுவோம்.

“அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் எரிமூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டழுக்கும் அன்றோகவி கற்கின்றதே”

- கந்தர் அலங்காரம்

# இராசன் வாத்தியார்

- முத்து

இலண்டனில் வசந்த காலத்தில் (Spring) மரஞ்செடிகொடிகள் தழைக்க ஆரம்பிக்கும். ஆனால், இந்த வருடம் வசந்த காலமும் பனிக்காலம் (Winter) போலக் குளிராகவே இருந்தது. போதாததற்குச் சித்திரை மாதத்தில் பனி வேறு பெய்தது. இந்த வருடம் கோடைகாலமும் குளிர்தானோ என்று மனிதர் ஏங்க ஆரம்பித்தனர். மரஞ்செடிகொடிகளும் வழமைபோல மீண்டும் பசுமைபெற்றுவரச் சூடான சூரியனின் கதிர்வீச்சைக் காணத் தவித்துக் கொண்டிருந்தன. கடைசியில் கோடை ஆரம்பித்த பிறகே சூரியனும் எல்லோருடைய ஆவலையும் நிறைவேற்ற எண்ணித் தன் சூடான ஒளிக்கிரகணத்தைப் பூமியில் பரப்பினான். மக்களும் மகிழ்ந்தனர். மரஞ்செடிகொடிகளும் வேகமாகத் தழைக்கத் தொடங்கின. தமிழ்ப் பள்ளியைச் சுற்றியிருந்த மரங்களும் பூப்பந்தலாகப் பல நிறங்களில் காட்சியளித்தன. சில மரங்கள் பூப்பூத்து உதிர்ந்த பின்பே இலைகள் வரும். வழக்கம் போல நேரந்தவறாது இராசன் வாத்தியாரும் முகத்தில் புன்னகை மலர, வகுப்பில் நுழைகிறார். மாணவர்களும் ஆரவாரமாக எழுந்து நின்று வணக்கம் சொல்கின்றனர்.

வாத்தியார் : வணக்கம் பிள்ளைகளே. எல்லோரும் நலமா?

பிள்ளைகள் : காலை வணக்கம் சேர்.

வாத்தியார் : எல்லோரும் அமருங்கள் பிள்ளைகளே. வீட்டில் தமிழ் படித்தீர்களா? ஆங்கிலப் பள்ளியில் படிப்பெல்லாம் எப்படிப் போகுது?

கண்ணன் : தமிழ் கொஞ்சம் படித்தேன். ஆங்கிலப்பள்ளியில் எல்லாம் வழக்கம் போலப் போகுது சேர்.

வாத்தியார் : என்னடா கண்ணா? கொஞ்சம் அலுப்புத் தட்டுகிற மாதிரிச் சொல்கிறாய்? ஆங்கிலப் பள்ளிப்படிப்பு உங்களுக்கு மிக முக்கியம். அதுதான் உங்கள் எதிர்காலத்திற்கு அவசியமானது கண்ணா!

கண்ணன் : நிறைய home work! அதெல்லாம் செய்து முடிக்க வேண்டும். சில நாள்களில் பள்ளியால் வந்து Tuition உக்குப் போக வேண்டும். அதன்பிறகு வீட்டுப்பாடம் முடிக்க நடுச்சாமம் ஆகிவிடும் sir.

அமுதா : தமிழ்ப்பள்ளிதான் எங்களுக்குச் சந்தோஷமான இடம் சேர். நண்பர்களோடு கதைக்கலாம். உங்களோடு கதைக்கலாம்; கதை கேட்கலாம்.

வாத்தியார் : இன்று ஔவையாரின் மூதுரை என்ற பகுதியில் ஒரு பாடல் சொல்லித் தருகிறேன், பிள்ளைகள் கேளுங்கள்! கவனமாகச் சொற்களை உச்சரித்துச் சொல்லுங்கள்.

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.

(ஆசிரியர் முதலில் பிள்ளைகள் சரியாக உச்சரித்து வாசிக்கச் சொல்லிக் கொடுக்கிறார். பின்பு எழுத வைக்கிறார். அவர்கள் சரியாக எழுதியுள்ளார்களா என்பதையும் நிச்சயப்படுத்துகிறார்.)

அமுதா : இதனை மனப்பாடம் செய்ய வேண்டுமா சேர்?

வாத்தியார் : எங்கே வாசித்துக் காட்டு பார்ப்போம். (அமுதா வாசிக்கிறார்)

அமுதா : நான் வாசித்தது சரியோ சேர்?

வாத்தியார் : அளவே என்ற சொற்களை வாசிக்கும் போது "ல" என்ற சத்தம் கேட்கிறது. "அலவே" என்று ஒலிக்கிறது. அதைக் கொஞ்சம் திருத்த வேண்டும். எல்லோரும் அடுத்த வகுப்பில் பாடலை மனப்பாடம் செய்துகொண்டு வரவேண்டும். மறக்காதேங்கோ.

ராம் : திருக்குறள் என்றால் easy யாக இருக்கும் சேர். இது நான்கு அடிகளாக இருக்கே சேர்.

வாத்தியார் : இரண்டு அடிகள்தானே கூட ராம். பாட்டியிடம் கேட்டுப் பாடமாக்கு. உங்கள் பாட்டிக்கு எல்லாமே மனப்பாடமாக இருக்கும் ராம்.

கண்ணன் : வாசிக்க இலகுவாக இருக்கு சேர். நான் பாடமாக்கிவிடுவேன். அப்போ இன்று என்ன கதை சொல்லப் போறீங்கள்.

வாத்தியார் : முதலில் பாடலின் கருத்தைப் படிப்போம். பிறகு கதைக்குப் போகலாம் கண்ணா!

அமுதா : இன்று என்ன கதை சேர் சொல்லப் போறீங்கள்?

வாத்தியார் : நல்ல interesting story. இப்போ பாடலின் கருத்தைச் சுருக்கமாகப் படிப்போம். இந்தப் பாடலில் எத்தனை சொற்களுக்கு அர்த்தம் தெரியும்? சொல்லுங்கோ பார்ப்போம்.

கண்ணன் : நீர் என்றால் தண்ணீர் சேர்.

ராம் : செல்வம் என்றால் மக்களிடம் இருக்கும் பொருள், பணம் எல்லாம் வரும் சேர்.

கீதா : அறிவு, குணம், இந்தச் சொற்கள் எல்லோருக்கும் தெரியும் சேர்.

அமுதா : "கற்ற" என்றால் படித்த என்று அர்த்தம் சேர்.

கிருஷ்ணா : "அளவு" என்றால் எவ்வளவு என்று மதிப்பிடுவது சேர்.

ஆரணி : "பெற்ற" என்றால் கிடைத்த, மற்றது "நீர்" என்னும் சொல்லை நீங்கள் என்பதற்குப் பதிலாகச் சிலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

வாத்தியார் : உங்களுக்கு இவ்வளவும் தெரிந்திருக்கிறதே! மிக நல்லது. எனக்குக் கேட்கச் சந்தோசமாக இருக்கு. முதல்வரியைப் பாருங்கள். தாமரைப்பூ தண்ணீரில் வளர்வதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். ஆம்பல் என்பதும் தண்ணீரில் வளரும் செடி. அதனை "அல்லி" என்று வழக்கமாகக் குறிப்பிடுவார்கள். அது குளத்திலோ ஆற்றிலோ எங்கே வளர்ந்தாலும் தண்ணீர் எவ்வளவு இருக்கோ அதன் அளவுக்கே வளரும். தண்ணீர் மட்டத்திற்கு மேலே போகாது. எத்தனைபேர் இதனைப் பார்த்திருக்கிறீர்கள்?

அமுதா : நான் பார்த்திருக்கிறேன். தாமரைக் குளத்திலேயே இதுவும் வளர்ந்திருந்தது. தாமரைப் பூவைவிடச் சிறியதாக இருக்கும்.

ராம் : இங்கிலாந்திலும் சில பூங்காக்களில் வளர்க்கிறார்கள்.

வாத்தியார் : மிக நல்லது. மற்றவர்களும் எங்காவது போகும் போது கவனித்துப் பாருங்கள். அப்போது பாடலின் கருத்து நன்றாகவே விளங்கும். அடுத்த வரியைப் பாருங்கள்.
"தான்கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்றால் ஒருவரின் நுண்ணிய (கூர்மையான) அறிவு அவர் கற்ற - படித்த புத்தககங்களின் அளவைப் பொறுத்து இருக்கும். நூல் என்பது புத்தகம். அதனாலே நீங்கள் எவ்வளவு புத்தகங்களைப் படித்திருக்கிறீர்களோ அந்த அளவுக்கே உங்கள் அறிவும் (knowledge) இருக்கும் இந்த இரண்டு வரிகளும் (அடிகள்) எல்லோருக்கும் விளங்கியதோ பிள்ளைகள்? விளங்கியவர் சொல்லுங்கோ பார்ப்போம்.

கண்ணன் : நீர் உயரத்திற்கு அல்லிச்செடி வளர்ந்து இருக்கும் சேர். அதேபோல நாங்கள் எவ்வளவு புத்தகங்களைப் படிக்கிறோமோ அவ்வளவுக்கு எங்களுடைய அறிவும் இருக்கும் சேர்.

அமுதா : நீரின் உயரம் குறைந்தால் அல்லிக்கொடியும் உயரம் குறைவாக இருக்கும் அதைப்போல நாங்கள் அதிக புத்தகங்களைப் படிக்காதுவிட்டால் எங்கள் அறிவும் குறைவாகவே இருக்கும்.

ராம் : அப்படியானால் நாங்கள் அதிகளவு புத்தகங்கள் வாசிக்க வாசிக்க எங்கள் அறிவும் கூடிக் கொண்டே போகும் அப்படித்தானே!

கிருஷ்ணா : ஔவையார் நாங்கள் நிறையப் புத்தகங்கள் வாசிக்க வேண்டும். அப்போதுதான் அறிவு வளரும் என்று சொல்கிறார்.

வாத்தியார் : பிரமாதம்! எனது மாணவர்களுக்கு நன்றாகவே விளங்கியிருக்கு. இன்று படித்த இரண்டு வரிகளின் கருத்தை எழுதிக் கொள்ளுங்கள். எல்லோருக்கும் தெளிவாக விளங்கியிருக்கிறதா?

ஏனையபிள்ளைகள் : எங்கள் எல்லோருக்குமே விளங்கியிருக்கு சேர். வகுப்பு முடியக் கொஞ்ச நேரம் தானே இருக்கு. இப்போ கதையைச் சொல்லுங்கோ சேர்.

வாத்தியார் : சரி, அடுத்த வகுப்பில் பாடலையும் இன்று படித்த கருத்தையும் எல்லோரும் சொல்ல வேண்டும்.

மாணவர்கள் : கட்டாயமாகச் செய்வோம் சேர்.

வாத்தியார் : முற்காலத்தில் பெரிய பாடசாலைகள் கட்டப்படவில்லை. சிறிய அளவில் குருகுலம் (பள்ளி) அமைத்து, மாணவர்களுக்குக் குரு (ஆசிரியர்) கல்வி கற்பிப்பார்கள். வித்தியாதரர் என்பவர் அழகிய கிராமம் ஒன்றில் குருகுலம் அமைத்துக் கல்வி கற்பித்து வந்தார். ஒருநாள், மூன்று மாணவர்கள் கல்வி கற்க வந்தார்கள். வித்தியாதரர் அவர்களைப் பரீட்சித்துப் பார்த்தபின்பு தன்பள்ளியில் சேர்த்துக் கொண்டார்.

கண்ணன் : அவர்களுக்கு என்ன பேர் சேர்? குரு அவர்களுக்கு என்னென்ன பாடங்கள் படிப்பிப்பார்.

வாத்தியார் : அரவிந்தன், கோவிந்தன், ரவீந்திரன் என்பவர்களாகும். குரு அவர்களைத் தனித்தனியே கூப்பிட்டு அவர்கள் என்ன படிக்க விரும்புகிறார்கள் என்று கேட்டார்.

அமுதா : அவர்கள் சமயம், இலக்கியம், சங்கீதம் என்று சொல்லியிருப்பார்களோ சேர்?

வாத்தியார் : அதைத்தான் இப்போ கூற வருகிறேன் அமுதா! அரவிந்தன் தான் பொது நிர்வாகம் (Public Administration) கற்று அரசாங்க உயர் அதிகாரியாக வரப் போவதாகச் சொன்னான்.

ராம் : கோவிந்தன் என்ன படிக்க விரும்பினான் சேர்..?

வாத்தியார் : கோவிந்தன் தான் வைத்தியம் படித்துச் சிறந்த வைத்தியராக வந்து மக்களுக்கு மருத்துவச் சேவை செய்யப்போவதாகக் கூறினான். அதற்கு ஒரு பெரிய வைத்தியசாலை கட்டித் தான் நிறையப்பணம் சம்பாதிக்க ஆசைப்படுவதாகக் கூறினான்.

கீதா : ரவீந்திரன் எஞ்சினியர் அல்லது கணக்காளராக வருவதற்கு ஆசைப்பட்டிருப்பானோ சேர்?

வாத்தியார் : அதுதான் இல்லை கீதா. ரவீந்திரன் ஆசிரியர் எதைக் கற்றுக் கொடுத்தாலும் தான் கவனமாகப்படிப்பேன் என்று சொன்னார்.

குமரன் : அவனுக்கு எதைப் படித்தால் நல்லது என்று தெரியவில்லைப் போலிருக்கு சேர்.

வாத்தியார் : அவனுக்குத் தன் குருவில் நல்ல நம்பிக்கை. அவர் தனக்குச் சரியானதையே சொல்லிக்கொடுப்பார் என்று நினைத்தார்.

கிருஷ்ணா : ரவீந்திரனுக்குத் தானாகவே சிந்திக்கத் தெரியவில்லை போல சேர்.

வாத்தியார் : அப்படியில்லை கிருஷ்ணா. ஒரு குருவால் மாணவரின் திறமையைக் கண்டுகொள்ள முடியும். அதனால் ரவீந்திரன் அவர் தனக்கு ஏற்ற கல்வியை அவர் கற்பிப்பார் என்று திடமாக நம்பினான்.

அமுதா : பிறகு ஆசிரியர் என்ன செய்தார் சேர்?

வாத்தியார் : வித்தியாதரர் அரவிந்தன் நிர்வாகத்துறை கற்கவும் கோவிந்தன் வைத்தியம் கற்றுக் கொள்ளவும் அனுமதித்தார்.

கண்ணன் : ரவீந்திரனுக்கு என்ன கற்பித்தார் சேர்?

வாத்தியார் : ரவீந்திரனிடம், தான் மற்றவர்களுக்குக் கற்பிக்கும் எல்லா விஷயங்களையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கச் சொன்னார்.

-தொடரும்.....



## திருமதி ராதா (மல்லிகா) பாலசேகரம்

“ராதா” என அனைவராலும் அன்பாகக் குறிப்பிடப்பட்ட திருமதி பாலசேகரம், இவ்வாண்டு, ஜூலை மாதம் எட்டாம் திகதி நம்மைவிட்டு மறைந்தார். அனைவரையும் இன்முகத்துடன் அன்பாக நடத்தும் பண்பு நிறைந்தவர் அவர். யார் அவர்கள் வீட்டுக்கு எந்நேரம் போனாலும், ராதாவும் அவர் கணவர் பாலசேகரமும் விருந்தோம்பலில் என்றுமே தவறியதில்லை.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சியிலும் இந்தத் தம்பதியர் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். சங்கத்தின் தொண்டுகள், வழிபாடுகள், செயற்பாடுகள் அனைத்திலும் ஈடுபட்டு நன்முறையில் செயற்பட்டவர்கள்.


கணவர் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் அவருக்கு ஆதரவாகப் பின்னணியில் இருந்து செயலாற்றியும், பின்னாளில் தானே செயற்குழு உறுப்பினராக இருந்தும் செயலாற்றியவர் ராதா அவர்கள். அன்னாரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கலசம் ஆசிரியர் குழு

# சிவாலய தரிசனம்

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துக்கொண்டு கோயிலுக்குப் போதல் வேண்டும். கோயிலுக்குக் கிட்டப் போன உடனே கால்களைக் கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக்கொண்டு திருநந்திதேவரை வணங்கி, “பகவானே! அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அநுமதி தந்தருளும்” என்று வேண்டிக்கொண்டு உள்ளே போதல்வேண்டும். பின்பு பலிபீடத்தையும் நந்திதேவரையும் கும்பிடவேண்டும். அதன்பின் பிள்ளையாரையும், சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும், நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயக்குரவரையும் தரிசனம் செய்தல் வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனம் செய்யும்பொழுது, முட்டியாகப் பிடித்து இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டிக் கும்பிடவேண்டும். கும்பிடும்பொழுது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்றல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரத்துக்குக் குறையாமல் செய்தல் வேண்டும். தலை, கைகள், செவிகள், புயங்கள், மோவாய் என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கைகள், முழந்தாள்கள் என்னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். பின்பு எழுந்து இரண்டு கைகளையும் குவித்துத் தியானஞ் செய்துகொண்டு மெல்ல மெல்லக் கோயிலை வலமாகச் சுற்றிவந்து பின்பும் சந்நிதானத்திலே நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். பிரதக்ஷிணஞ் (வலமாகச் சுற்றிவருதல்) செய்தபின் சண்டேசுரர் சந்நியை அடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ்செய்து வணங்கல் வேண்டும். பின்பு சுவாமி சந்நிதானத்தில் வந்து மீட்டும் நமஸ்காரம் செய்து வீட்டுக்குப் போதல்வேண்டும். ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போவது உத்தமம். ஒவ்வொரு நாளும் போக இயலாதவர் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி, சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.


அட்டாங்க நமஸ்காரம்


பஞ்சாங்க நமஸ்காரம்

கோயிலுக்குப் போனால் வேடிக்கைகளை விரும்பாமற் சிவ வழிபாட்டிலேயே மனதைச் செலுத்தல் வேண்டும். இந்த ஊரிலே வருஷத்துக்கு இரண்டுமுறை பெரிய நீதிபதி விசாரணைக்கு வருகிறார். அங்கே நாம் நிற்கும்பொழுது எவ்வளவு அமைதியோடும் பயபக்தியாயும் நிற்கிறோம்; இருமல் வந்தாலும் அடக்கிவிடுகிறோம். நீதிபதிக்கு முன்னே இவ்வளவு பயபக்தியாய் நின்றால், நமது சக்கரவர்த்திக்கு முன் எப்படி நிற்போம்? அப்படியானால், கடவுள் சந்நிதானத்திலே நாம் எப்படி நிற்கவேண்டும்? நமது சக்கரவர்த்திக்கு இந்தப் பூமியில் ஒரு சிறு பகுதி தானுண்டு; இந்தப் பூமி முழுவதும் அவருக்கிருந்தால் அவர் எவ்வளவு பெரியவராக இருப்பார்.

இந்தப் பூமியிலும் சூரியன் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. சூரியனிலும் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்கள் கோடாநுகோடி உள்ளன. இவை எல்லாவற்றறையும் உண்டாக்கிய

சிவபெருமான் எவ்வளவு பெரியவர் என்பதை யோசித்துப்பாருங்கள்! உண்டாக்கியதும் எப்படி? உண்டாக்கவேண்டும் என்று அவர் நினைக்கவுமில்லை; அவர் வாளா இருக்க அவரது சக்தியால் எல்லாம் உண்டாகின்றன. இப்படியானாற் சிவபெருமானுடைய பெருமை எவ்வளவு? பெரிய நீதிபதிக்கு முன்னே நிற்கும்போது இருமல் வந்தாலும் அடக்கிக்கொண்டு பயபக்தியாய் நிற்றல் வேண்டுமானால், சிவபெருமானுடைய சந்நிதானத்திலே நாம் எவ்வளவு பயபக்தியாய் நிற்றல்வேண்டும்? கோயிலுக்குப் போகின்றவர்கள் இயன்றஅளவு தொண்டு செய்தல் உத்தமம். குடை பிடித்தல், தீவர்த்தி பிடித்தல், வாகனங் காவுதல், பூந்தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றாவது செய்தல் வேண்டும்.

சில கோயில்களிலே நிகழும் திருவிழாக்களிலே மூன்று பெருங் கொடும் பாதகங்கள் செய்யப்படுகின்றன. கடவுளிடத்து அன்புடையவர்கள் அப்படியான விழாக்கள் நடைபெறும்போது அந்த இடங்களுக்குப் போகலாகாது. போகிறவர்கள் அந்தப் பாதகங்களுக்கு உடன்பட்டவராய்த் தாமும் பாதகர்களாவார்கள்.

அவற்றுள் மிகக் கொடிய பாதகம் சுவாமியுடைய திருமேனியிலே பொய்க் கரங்களையும் பொய்க் கால்களையும் கட்டுதலாம். இவைகளைச் சுவாமியின் மேலே கயிற்றினால் வரிந்து இறுக்கிக் கட்டுதல் எவ்வளவு கொடிய சிவத்துரோகமாகும். அதைச் சுவாமியென்று நினைப்பவர்கள் இந்தக் கொடிய வேலையைச் செய்வார்களா? இப்படியான பொய்க் கால்களையும் கைகளையும் எங்களுடைய உடம்பிலே யாராயினும் கட்டுதற்கு வந்தால் நாங்கள் விடுவோமா? சுவாமியை ஒரு பாவைப்பிள்ளை என்று நினைப்பவர் மாத்திரம் அஞ்சாமல் இப்படியான செயல்களைச் செய்வர். சுவாமியைப் பாவைப்பிள்ளையாக நினைத்தல் எவ்வளவு நிந்திப்பதாக முடியும்?

இரண்டாவதான கொடிய பாதகம் யாதெனில், கோயிலிலே பெண்களைக்கொண்டு நடனம் செய்வித்தலாம். கோயிலுக்குப் போகிறவர்கள் கடவுளை வணங்குதலைக் கைவிட்டு இவர்களுடைய நடனத்தைப் பார்ப்பார்களாயின், அவர்கள் இந்தப் பெண்களைக் கடவுளிலும் மேலாக மதிப்பவர்கள் ஆகின்றனர். இப்படியாகக் கடவுளை அவமதித்தல் பெருஞ் சிவத்துரோகமேயாம்.

மூன்றாவதான சிவத்துரோகம் அர்த்தயாம காலத்தின் பின் பூசை, திருவிழா முதலியவற்றை நடத்துதலும் தரிசித்தலுமாம். சில இடங்களிலே சூரியோதயத்தின் பின்னரே விழா முடிகின்றது. இது சிவாகம விதிக்கு முழு மாறான செய்கை. கடவுளிடத்து அன்புடையவர்கள் அர்த்தயாமக் காலம் சென்றவுடனே கோயிலை விட்டுப் புறப்படுதல் வேண்டும். சிவராத்திரியில் மாத்திரம் நான்கு யாமங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் தக்கதாம்.

சைவப் பெரியார் சு சிவபாதசுந்தரம், B.A




நன்றி: சைவபோதம், இரண்டாம் புத்தகம்

# RUBY'S CATERING

020 8799 7180

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |


திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton · THISTLE HOTELS more than just accommodating · Holiday Inn

*உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WJ
WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜூவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)